15-10-56

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

820

2

செய்திகள்

குழந்தைகள் மியூஸியம்

சென்னையிலுள்ள மியூஸியத்தில் குழந்தைகளுக்கான கண்காட்சிச் சாலை (மியூஸியம்) அமைக்க எண்ணியிருக்கிறார்கள். சென்னை கவர்னராக இருந்து, இப்பொழுது பம்பாய் கவர்னராகப் போகவிருக்கும் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அதற்கான கால்கோள் விழாவை நடத்தினார்கள். கவர்னர் அவர்கள் நவம்பரில் பம்பாய் கவர்னர் பதவியை ஏற்பார் என்று தெரிகிறது.

கன்னியாகுமரி ஜில்லா

இதுவரையில் கன்னியாகுமரியும் மற்றும் 5 தமிழ்த் தாலுக்காக்களும் திருவாங்கூர் ராஜ்யத்தில் சேர்ந்திருந்தது. வருகிற நவம்பர் முதல் தேதி முதல் அந்தத் தாலுக்காக்கள் சென்னை ராஜ்யத்தோடு சேர்ந்து விடுகின்றன. அந்தப் பகுதிக்கு, 'கன்னியாகுமரி ஜில்லா' என்று பெயர் வழங்கப்படும். இந்த நாளை நாகர்கோயிலில் ஒரு பெரிய விழாவாகக் கொண்டாட எண்ணியிருக்கிறார்கள்.

கலை மன்றம்—பாரதி விழா

கல்மண்டபம் (சென்னை-13) நகராண்மைக் கழக உயர்தர ஆரம்பப் பள்ளியின் கலைமன்றத்தில் பாரதி விழா திரு தமிழ்வாணன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பாரதியின் உருவப்படத்தை, திரு ஆர்வி திறந்துவைத்தார். மன்றத்தின் தலைவரும் தலைமையாசிரியரும் வந்திருந்தவர்களை வரவேற்று, விழாவை வெற்றிகரமாக்கினார்கள்.

நட்பு ஸ்டாம்பு

உலகச் சிறுவர்களிடையே நட்பை வளர்க்க 3 செண்டு பிரத்தியேக ஸ்டாம்பு ஒன்றைத் தபால் இலாகா வெளியிடுமென அமெரிக்கப் போஸ்டு மாஸ்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார். 'நட்பு - உலக சமாதானத்தின் திறவுகோல்' என்று இந்த ஸ்டாம்புக்குப் பெயர். பள்ளிக் குழந்தைகளிடையே தேசமெங்கும் நடைபெற்ற ஒரு போட்டியில் இது தேர்ந்தெடுக்கப்பட்டது.

மாணவர் உலகம்

மயிலாப்பூரில் உள்ள மாணவர் உலகம் என்ற சிறுவர் குழாம் ஓர் உதவி நிதி நாடகம் நடத்துகிறார்கள். வேள் 'பாரி என்ற' நாடகம் விஜயதசமியன்று தெற்கு மாடவீதியிலுள்ள ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பாடசாலையில் நடைபெறுகிறது.

மிக நீளமான டெலிபோன் இணைப்பு

இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இதுவரை ரேடியோ டெலிபோன் மூலம்தான் செய்திகள் சென்று வந்தன. வானிலையினாலும் குழப்பத்தினாலும் அடிக்கடி இதன் மூலம், செய்திப் போக்குவரத்து, தடைப்பட்டு வந்தது. ஆனால் இப்போது இரண்டு ஆண்டுகளாக முயன்று, கம்பிமூலம் டெலிபோன் இணைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இணைப்பு 2250 மைல் நீளமுள்ளது.

கிரிக்கெட் இந்தியக் கோஷ்டியினர்

சென்னையில் இந்த மாதம் 19-ஆம் தேதி இந்தியா - ஆஸி முதல் டெஸ்ட் மாட்ச் நடைபெறப்போகிறது. இந்தியக் கட்சியில் உம்ரிகர் (காப்டன்) தமானே (விக்கெட் கீப்பர்) ராம்சந்த், ராய், கிருபால் சிங் (சென்னை), மன்காட், குலாம் அகமது, மஞ்ரேக்கர், ஜாசு பட்டேல், அதிகாரி, குப்தே, கோர்படே ஆகியோர் இருக்கிறார்கள்.

520
4-56

கண்ணன்

OF THE REGISTRAR ... MADRAS
14 NOV 1956

பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 20

15 - 10 - '56

குழந்தைகளே!	பக்கம்	2
பட்டுக் கைக்குட்டை	..	3
சைனா சு - சூ!	..	4
உயிரும் உரிமையும்	..	9
பாலர் கவியரங்கம்	..	12
பரிசு பெற்ற சாமியார்	..	13
பொடி விஷயம்	..	15
அநுராதா	..	21
இதோ ஒரு புத்தகம்	..	24
கொத்தவரங்காய்	..	25
புலிக்குட்டி	..	32

போட்டோ: N. ராமகிருஷ்ணா

செய்திகள் - 2 - அட்டை.

புதிய பாரதம் - 3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

அருமையான சம்பவம்

மோகனுக்கு அன்றுதான் கோடை விடுமுறை ஆரம்பமாயிற்று. அவன் அன்று கோடம்பாக்கத்தில் இருந்த தனது நண்பன் வீட்டிற்குப் புறப்பட்டான். எலெக்டிரிக் ரெயிலில் முதல் வகுப்பில் ஏறி உட்கார்ந்திருந்தான். அங்கே 'குல்கந்து' பத்திரிகை ஆசிரியர் தமிழ்க் கொலை உட்கார்ந்திருந்தார். மோகன் அவரைப் போட்டோவில்தான் பார்த்திருந்தான். அவரிடம் பேச விருப்பங் கொண்டான். உடனே அவரிடம், ''வணக்கம், குல்கந்து ஆசிரியரே, நான் உங்கள் பத்திரிகையைத் தவறாமல் படித்து வருகிறேன். உங்கள் பத்திரிகை மிகவும் நன்றாக இருக்கிறது. நீங்கள் எழுதிவரும் தொடர்கதை மிகவும் விறுவிறுப்பாகச் செல்கிறது. ஒவ்வொரு வாரமும் அடுத்த இதழ் எப்போது வரும் என்று ஆவலுடன் நாங்கள் எதிர்பார்க்கிறோம்'' என்று பொழிந்து தள்ளினான்.

அவர் ஏதாவது பதில் பேசுவார் என்று ஆவலுடன் எதிர்பார்த்தான் மோகன். ஆனால் தமிழ்க் கொலை ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டிருந்தாரே தவிர இவன் பக்கமே திரும்பவில்லை. மோகனுக்கு வருத்தம் ஒரு புறம். ஆத்திரம் மறுபுறம். இதை யாரிடம் சொல்வது? இதற்குள் அவன் இறங்கவேண்டிய ஸ்டேஷன் வந்தது. இறங்கியதும் அங்கே அவன் நண்பன் நின்றுகொண்டிருந்தான். அவனிடம் விஷயத்தைச் சொன்னான் மோகன். நண்பன் இதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தான். மோகனுக்கு அவன் சிரிப்பின் பொருள் ஒன்றும் விளங்கவில்லை. விழித்தான். பிறகு, ''குல்கந்து ஆசிரியர் முழுச் செவிடு என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டான் நண்பன். அப்போது மோகனின் முகம் போன போக்கை வர்ணிக்கவும் வேண்டுமா?

—பி. வி. ஆர்.

குழந்தைகளே!

அடுத்த இதழ்தான் தீபாவளி மலர். அழகு மலர்.

கண்ணன் தீபாவளி மலரைப்பற்றி இந்த இதழில் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தேன். மலர் வேலைகள் மிக ஜரூராக நடந்து வருகின்றன. அங்கங்கே குழந்தைகள் கண்ணன் மலருக்குத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை அறிய மகிழ்ச்சி. இதுவரை பெயர் கொடுக்காதவர்கள் உடனே கொடுத்துவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். அப்புறம் கொடுக்கலாம் என்று அசட்டையாக இருந்தால் மலர் கிடைக்காது.

மலர் மிகச் சிறப்பாகத் தயாராகி வருகிறது என்று முன்பு குறிப்பிட்டேன். ஆமாம்; முன் வருஷங்களைவிடச் சிறப்பாகவே இது அமைந்திருக்கிறது. எந்த மலரிலும் கண்ணன் மலர் உயர்ந்த மலர் என்று நீங்கள் மட்டுமல்ல, உங்கள் வீட்டுப் பெரியவர்கள், உங்கள் நண்பர்கள் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளும் வகையில் அது உருவாகி வருகிறது.

எத்தனையோ மூவர்ணப் படங்கள், வெட்டி ஒட்டும் படங்கள், பொழுதுபோக்குப் பகுதிகள், சினிமா நடிகர் நடிகையரின் க்விஸ் படங்கள், ஹாஸ்யத் துணுக்குகள், புகைப் படங்கள், கிளி சர்க்கஸ் முதலியனவெல்லாம் கண்ணைப் பறிக்கும்படி விளங்குகின்றன.

இன்னும் நாட்டின் நமது மதிப்புக்குரிய பெரியார்களுடைய எழுத்தோவியங்கள் மலரை அலங்கரிக்கின்றன. மலருக்கே அவர்களுடைய ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கிய கற்பனை மதிப்புத் தருகிறது.

இன்னும் இந்த மலரில் புதிய இளம் எழுத்தாளர்கள். தங்கள் புதுமை மிகு கதைகளைக் கருத்தழகும் நடையழகும் மிளிர எழுதியிருக்கிறார்கள். எத்தனை வகையான கதைகள், தெரியுமா! துப்பறியும் கதை, மர்மம் நிறைந்த கதை, ஹாஸ்யம் மிளிரும் கதை, அறிவு தீட்டும் கதை, கற்பனை வளம் மிகுந்த கதை, பழங்காலக் கதை, வருங்காலக் கதை என்று பலர் பல தினுசான கதைகள் எழுதி மலரை இணையற்றதாக்கியிருக்கிறார்கள்.

கவிஞர்கள் அழகொழுகும் பாடல்களை வாய் நிறைய, உள்ளம் மகிழப் பாடும்படி கவிதைகள் எழுதித் தந்திருக்கிறார்கள்.

இதெல்லாம் மலரின் மேன்மையை மேலும் உயர்த்துகின்றன.

இந்தத் தடவை பல ஓவியர்கள் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பல வகையான படங்கள் கதைகளைக் கவர்ச்சிகரமாக்குகின்றன.

இன்னும் இப்படியே எவ்வளவோ சொல்லலாம். ஆனால் இப்போதைக்கு இது போதும் என்று எண்ணுகிறேன். மற்றவற்றை மலரில் பாருங்கள். பார்த்துவிட்டு எங்களுக்கு விரிவாக எழுதுங்கள். மலரில் வழக்கமாக வரும் தொடர்கதைப் பகுதிகள் இரண்டும் இடம் பெறுகின்றன.

ஏஜெண்டுகள் இருக்கும் இடங்களில் உள்ளவர்கள் அங்கேயே பெயரைப் பதிவு செய்துகொண்டால் மலர் கிடைக்கும். ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உள்ளவர்கள் எங்களுக்கு நேரே பணத்துடன் எழுத வேண்டும். சாதாரணத் தபாலில் மலர் கெட்டுப்போய்விடுமாதலால் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்ப மலர் விலையுடன் தபால் செலவும் சேர்த்து மொத்தம் ரூ. 1-6-0 அனுப்ப வேண்டும்.

விமரிசனப் போட்டியின் முடிவு தீபாவளிக்கு அடுத்த இதழில் வெளிவரும்.

ஆசிரியர்

1. செக்கச் செவேலென்று ரத்தச் சிவப்பிலோர்
   பட்டுக்கைக் குடையம்மா - மனம்
   செக்கச் செய்யுமெழில் மிக்கச் சிறந்ததோர்
   பட்டுக்கைக் குட்டையம்மா!

2. பச்சைப் பசேலென்று கொச்சைத் தமிழ் பேசும்
   பவளச் செவ் வாயுடனே - ஒரு
   பச்சைக் கிளியொன்று தைச்சிருக்கு தொரு
   பக்கத்து மூலையிலே!

3. பட்டுப் பூச்சியொன்று ரெட்டைச் சிறகுடன்
   பறக்கத் துடிக்குதுபார் - அதை
   எட்டிப் பிடித்திடத் திட்டமிட்டு நிற்கும்
   சிட்டுக் குருவியைப் பார்!

4. வட்ட வட்டமாக எட்டு வகையிலே
   வண்ண மலர்களம்மா - இது
   திட்ட மிட்டுஒரு கெட்டிக்காரன் செய்த
   பட்டுக்கைக் குட்டையம்மா!

சைஞ சத்ரு

ஆர்வி

சீனன் சொல்வதை இன்ஸ்பெக்டர் ஏற்கவேயில்லை. தவறுதலாக, பிரமையாகச் சொல்கிருன் என்றே அவர் எண்ணிஞர்.

''நீங்கள் அங்கே போய்ப் பாருங்கள். டாக்ஸி நின்றது தெரியும்'' என்ருன் சீனன்.

அதேபோல இரண்டு போலீஸ்காரர்கள் மதிலேறிக் குதித்து, சீனன் குறிப்பிட்ட மரத்தடியைச் சென்று பார்த்தார்கள். மரம் இருந்த பகுதியைத் தவிர மற்றப் பகுதியெல்லாம் செம்பூருங்கல்லாக, பாறையாக இருந்ததால், டாக்ஸி நின்ற சோடே தெரியவில்லை. சாலை வரையில் போய்ப் பார்த்தபோது, டயரின் சுவடு தெரிந்தது. ஆனுல் அதைக்கொண்டு டாக்ஸி வந்தது என்பதை ஏற்றுக்கொள்ள இன்ஸ்பெக்டர் தயாராக இல்லை. ''சாலையில் எத்தனையோ கார்கள் வருகின்றன, போகின்றன! அதனுல் அது மரத்தடியில் நின்ற வண்டியின் சுவடுதான் என்று எப்படிச் சொல்வது?'' என்று அவர் பிடிவாதமாக, முயலுக்குக் கொம்பு உண்டு என்கிற ரீதியில் பேசிக்கொண்டிருந்தார்.

சீனனுக்கு அதற்குமேல் என்ன சொல்வது என்று புரியவில்லை. கோபம் கோபமாக வந்தது. ஆனுல் இன்ஸ்பெக்டரிடம் கோபம் கொள்ளத் தைரியமும் இல்லை. ஆகவே பேசாமல் இருந்தான்.

எல்லாருமாகப் பங்களாவின் முன் ஹாலுக்கு வருவதும் அப்போது டெலிபோன் மணி கிணு கிணு என்று ஒலிப்பதும் சரியாக இருந்தன.

சீனன் ஓடிப்போய் ரிஸீவரைக் கையில் எடுத்தான்.

''ஹலோ! யாரு?''

''யார் பேசறது?''

''நான்தான் சீனன். நீங்க!''

''சீனன்தானே நீ?''

''ஆமாம். நீங்க யாரு, தெரியலியே!''

''தெரியாது; தெரியவும்கூடாது. மரியாதையா போலீஸையெல்லாம் போகச் சொல்லிட்டு இருந்தே, பொழச்சே! இல்லே, ஏதாவது வாலாட்டினியோ, தொலைஞ்சே! நீ எங்கே போனுலும் உன் தலை போயிடும். என்ன? பதிலைக் காணும்? காதிலே விழலியா?''

சீனன் மூச்சு முட்டப் பதில் சொல்லாமல் நின்ருன். இப்படிப் பட்ட ஒரு செய்தியை டெலிபோனில் கேட்க நேரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. கடைசியாக அந்தக் குரல், ''என்ன, சொன்னபடிச் செய்வியா?'' என்று கேட்டது. அவன் தன்னையறியாமல், ''ஆகட்டும்'' என்ருன்.

''நான் சொல்றபடி கேட்டே, நீ உயிர் பிழைக்கலாம்; சொத்து, எஸ்டேட் எல்லாவற்றையும்கூட் அநுபவிக்கலாம். இல்லையோ—''

''ம்—''

''இல்லையோ, அல்பாயுசாக உன் வாழ்வு முடிந்துவிடும். இன்றைக்கே முடிந்துவிடும். உன்னை எவ்வளவு

பேர் காவல் காத்தபோதிலும் சரி தான்!''

''நீ சொன்னபடியே செய்கிறேன். நீ யாருன்னு மட்டும் சொல்லிடு!''

''ஹஹ்ஹஹ்ஹா!''

அடுத்த நிமிஷம் டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைக்கும் ஓசை கேட்டது சீனனுக்கு. அவனும் விக்கிப்போய் டெலிபோனைக் கீழே வைத்துவிட்டு, மற்றவர்களிடம் வந்தான்.

''யாரு?'' என்றான் ஷங்கங்.

''யாரோ தெரியல்லே..உம்..'' என்று மழுப்பிவிட்டு, இதை இந்த இன்ஸ்பெக்டரிடம் சொல்வோமா, வேண்டாமா என்று மூளையைக் குழப்பிக்கொண்டான். ஆனால் இன்ஸ்பெக்டரோ கொஞ்சம்கூட விஷயம் புரிந்தவராகத் தெரியவில்லை. கண்ணால் கண்டதையே அவர் நம்ப மறுக்கும்போது, காதால் கேட்டதைச் சொன்னால் எங்கே காது கொடுத்துக் கேட்கப் போகிறார்? சீனன் ஒரு முடிவுக்கு வருவதற்குள் மீண்டும் டெலிபோன் மணி ஒலித்தது. அவனுக்கு அதைப் போய் எடுத்துக் கேட்க விருப்பமில்லை; தைரியமுமில்லை. எனவே அவன், ''ஸார்! உங்களுக்குத்தான் போலிருக்கு!'' என்று மெதுவாக இன்ஸ்பெக்டரிடம் சொன்னான். அவர் போய் எடுத்துப் பேச ஆரம்பித்ததுமே அவர் யாரோடு பேசுகிறார் என்பது புரிந்துவிட்டது. அந்தப் பக்கத்தில் பேசியவர் பாரிஸ்டர் வேதாசலம் என்பதை அவன் ஊகித்துவிட்டான்.

''எஸ் ஸார்! நான்தான் மவுண்ட் இன்ஸ்பெக்டர்! ஆமாம்..அதெல்லாம் ஒண்ணும் நம்ம வட்டாரத்திலே பயமில்லை..நான் பாரா போட்டுட்டுப் போறேன்..ஸார்! சும்மா எதையோ இருட்டிலே வெள்ளையாத் தெரிஞ்சதைப் பார்த்துட்டு, தம்பி பயந்திட்டுது. வேறே ஒண்ணுமில்லே..எஸ் ஸார்! எதுக்கும் நான் இரண்டு ஆளுங்களைக் காவல் போட்டுட்டுப் போறேன். ஆங்..என்ன சொல்றீங்க! எஸ். எஸ்..அப்படி ஏதாவது ஆபத்து கீபத்துன்னா ஒரு ரிங் கொடுத்தால் போதும்; உடனே நான் ரெயிடு பண்ணிடமாட்டேன்? ஆமா ஸார்! எம் பேரு துரைசிங்கம்..எஸ் ஸார்; தாங்க்யூ..குட் நைட்!''

இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் அசிங்கமாகப் பல்லை இளித்துக் கொண்டே, ''எல்லாம் கேட்டீங்களா, தம்பி! ஏதாவது கொஞ்சம் சந்தேகப்படறாப்பலே யாராவது வந்தான்னு வையுங்க..உடனே நம்ப ஸ்டேஷனுக்கு ஒரு ரிங் கொடுங்க! என்ன..நான் வரட்டுமா? டேய் தர்ட்டி, தர்ட்டி! நீயும் இன்னும் மூணுபேரும் இங்கேயே டியூட்டி பாருங்க! என்ன?'' என்றார்.

''ஆகட்டும் ஸார்!'' என்று காலை உதைத்துக்கொண்டு சலாம் அடித்தான் தர்ட்டி தர்ட்டி.

''ஸார்! நாங்க திரும்பி ஹோட்டலுக்கே போயிடறோம், ஸார்!'' என்று ஆரம்பித்தான் சீனன், நம்பிக்கையிழந்த குரலில்.

''ஆமாம் ஸார்!'' என்று கூடவே கெஞ்சினான் ஷங்கங்.

''அட சும்மா இருங்க, தம்பிங்களா? என்ன பயம் இங்கே? துரைசிங்கம் இருக்கிற ஊரிலே ஒரு பயல் மூச்சுக் காட்டிப்புடுவானா, துணிச்சலா? ஹெஹ்ஹேன்னானும்! அப்புறம் அவன் இருக்கிறதா, இல்லே, அப்படியே போயிடறதா? சும்மா, பயப்படாமெ, தைரியமா இருங்க!'' என்று சொல்லிவிட்டு, பதிலுக்குக் காத்திராமல் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டிய உத்தரவுகளைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். போலீஸ் வான் வளைவில் சென்று மறைந்தது.

எல்லாரும் இருக்கும் வரையில் கொஞ்சம் தைரியமாகத்தான் இருந்தது. அவர்கள் போன பிறகு சீனனுக்குக் கொஞ்ச நஞ்சம் இருந்த தைரியமெல்லாம்கூடப் போய்விட்டது.

தர்ட்டி தர்ட்டி என்ற போலீஸ்காரனும் மற்ற மூன்று பேரும், அவனுக்கு முன்னால் வந்து நின்று ஏதோ பெரிய காரியம் ஒன்றைச் செய்துவிட்டதுபோலப் பல்லைக் காட்டினார்கள்.

சீனன் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து வீசி எறிந்து,

''இன்ஸ்பெக்டர் சொன்னதெல்லாம் நினைவுலே இருக்குமா?'' என்றான்.

நோட்டைக் கண்டதுமே அவர்கள் முகமெல்லாம் மலர்ந்து விட்டன.

''என்னாங்க தம்பி! நைட்டெல்லாம் இப்படியே முளிச்சிக்கினு இருக்கமாட்டோம்? ஏதாவது துளிச் சத்தம் கேட்டுது..டுப்புனு தான்! சுட்டுப்புடுவோம் சுட்டு!'' என்றான் தர்ட்டி தர்ட்டி, கையைத் துப்பாக்கி சுடுவதுபோல் காட்டி.

''நம்பளையே சுடாமெ இருங்க; அது போதும்'' என்றான் ஷங்கங்.

அதற்குமேல் பாரிஸ்டரின் டிரைவரை அனுப்பிவிட்டு, அவர்கள் படுப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். சீனனுக்கு, உள்ளூற ஒரே கலக்கமாக இருந்தது. கையிலே உள்ள அந்தப் பெட்டியை எங்கே, எப்படிப் பதுக்கி வைப்பது என்பது பெரிய பிரச்னையாக இருந்தது. பேசாமல், டிரைவரோடு பாரிஸ்டர் வீட்டுக்கே திரும்பிவிடலாமா என்றுகூட நினைத்தான். யாருக்குப் பயந்துகொண்டு, அவன் பறங்கி மலையில் வந்து இருக்க எண்ணினானோ அவனை அவன் தன் கண்ணால் கண்டது உண்மை! அவன் சாக்கடைக் குழாயைப் பற்றிக்கொண்டு பங்களாவில் ஏறியதும் உண்மை. ஆனால் அதைத் தான் ஒருவரும் நம்பவில்லையே! சொன்னால் கூடக் கேட்கவில்லையே! அப்படி ஏறியவன் இவ்வளவு பேர் தேடியும் கிடைக்காமல் எங்கே போய் மறைந்திருப்பான்? ஒரு கால் அதற்குள் தப்பிப் பறந்திருப்பானோ? டெலிபோனில் கூப்பிட்டு மிரட்டியவன் யார்? எங்கேயோ, அடிக்கடி கேட்ட குரல் மாதிரி இருந்ததே! ஹோட்டலில் யார் இந்த மாதிரிப் பேசக்கூடியவர்கள்?

சீனன் மெத்தையிலுள்ள பெரிய அறை பந்தோபஸ்தாக இருக்கிறதா என்று பார்த்துத் திருப்தியடைந்தான். அடேயப்பா! என்ன பாதுகாப்பாகவும், படாடோபமாகவும் அந்த அறை விளங்கியது! அந்தக் கிழவர் உபயோகித்த அந்தப் பெரிய குஷன் தைத்த மஞ்சத்தில் அவன் படுத்துக் கொண்

டான். தர்ட்டி தர்ட்டியைக் கூப்பிட்டு அந்த அறையின் வாசலில் ஒரு போலீஸ்காரனைக் காவல் இருக்கச் செய்தான். ஷங்கங் எதிரே கிடந்த சோபாவில் போய்ப் படுத்துக் கொண்டான்.

''டேய், இந்த மஞ்சத்திலே நாலு பேர் படுத்து உருண்டு புரளலாம்போல இருக்குடா! நீயும் வந்து படுத்துக்கோடா!'' என்று அவன் ஷங்கங்கை அழைத்தான்.

''எனக்கு இதுவே போதுமடா!'' என்று சொல்லிவிட்டான் ஷங்கங்.

அந்த மஞ்சம் மட்டுமே எத்தனையோ ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ளது என்பது சீனனுக்குத் தெரியாது. அதனுள் எத்தனையோ சூட்சுமமான அமைப்புகள் இருந்தன என்பதும் அவற்றைப் பழக்கம் இருந்தால் தான் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதும் அவனுக்குத் தெரியாது. சொல்வாரும் இல்லை. வாட்சுமேன் பங்களாவைச் சுற்றிப் பார்வையிடப் போய்விட்டான்.

ஒரு சுவிச்சைப் போட்டால் அறையில் நீல ஒளி ஒன்று



பரவியது. அடுத்த சுவிச்சைப் போட்டால், அந்த நீல விளக்கு அணைந்து, ஊதாவும் சிவப்பும் கலந்த கருஞ்சிவப்பு ஒளி பரவியது. அடுத்ததைப் போட்டால், ப்ளூ ரோசன்ட் ஒளி நிலவுபோல் வீசியது. அடுத்தது நல்ல வெயிலை போல ஒளி வீசியது. அந்த மஞ்சத்தில் படுத்தவாறே இந்தச் சுவிச்சுக்களையெல்லாம் போட வசதியாக இருந்தது.

சீனன் குருட்டு யோசனை செய்தவாறே படுத்திருந்தான். தலையணைகளுக்கும், திண்டுகளுக்கும் நடுவே அந்தச் சிறு தோல் பெட்டியை வைத்துவிட்டு, அதை அணைத்தாற் போல் படுத்திருந்தான். அவனுக்கு மட்டும் தெரிந்திருந்தால் எவனாலும் கண்டுபிடிக்க முடியாத பத்திரமான இடம் ஒன்று அந்த மஞ்சத்திலேயே இருந்ததைப் பயன்படுத்திக்கொண்டிருப்பான்.

நேரம் ஆக ஆக, சீனனுக்குத் தூக்கம் கண்களை அமட்டிக் கொண்டு வந்தது. மெல்ல மெல்ல அந்தக் குளிர்ச்சி நிலை பொருந்திய அறையில் அவன் சுகமாக நித்திரையில் ஆழ்ந்து போனான்.

'டண் டண் டண்' என்று கடிகாரம் பாட்டுப் பாடுவதுபோல் அடித்து ஓய்ந்தது. மணி பன்னிரண்டு. ஆனால் சீனனுக்கு ஒன்றுமே தெரியாது. அவன் அத்தனை களைத்துப் போயிருந்தான்.

''டுர்..டுர்..'' என்று ஷங்கங் குறட்டையே விடத் தொடங்கி விட்டான்.

சற்றைக்கெல்லாம் மறமற வென்று வெளியே ஏதோ முறிந்து விழும் ஓசை ஒன்று கேட்டது. அப்போதுதான் சீனன் திருட்டுக் கண்ணை விழித்துக்கொண்டு பார்த்தான். அந்த இடத்திலிருந்து பார்த்தால் கருநீலத் திரையிலே வைரப்

டாக்டர்: இவர் எப்பொழுதும் இந்த மாதிரிதான் குறட்டை விடுகிறது வழக்கமா?

உறவினர்: இல்லே, டாக்டர்! தூங்குகிறபோது மட்டும்தான்!

—பி. கே. சாமி.

பொட்டுகளைப் பொறித்ததுபோல இருளில் சென்னை நகரத்தின் விளக்குகள் எல்லாம் கண்ணுக்கு எட்டிய தென்கோடியிலிருந்து வடிகொடி வரையில் மினு மினு என்று மின்னிக்கொண் டிருந்தன.

சீனன் சட்டென்று விளக்கின் சுவிச்சைப் போட்டபோது யாரோ எழுந்து ஓடுவதுபோல இருந்தது. அறையில் நீல விளக்கின் ஒளி பரவியதால் ஓடியது மனிதனா, பூனையா என்று புரியவில்லை. ஷங்கங் காடாந்தகாரமாகத் தூங்கிக்கொண் டிருந்தான். சட்டென்று சீனனுக்குத் தோல் பையின் ஞாபகந்தான் வந்தது. நல்ல வேளை! அது இருந்த இடத்திலேயே பத்திரமாக இருந்தது.

''தர்ட்டி, தர்ட்டி!'' என்று இரைந்து கூப்பிட்டான் சீனன்.

யாரையும் காணும்.

''அடேய் ஜவான்!''

சத்தமே இல்லை.

''ஏய், வாட்சுமேன்!''

இதற்கும், பதில் வரவில்லை. இதற்கு மேல்தான் சீனனுக்குப் பயம் பிடித்துக்கொள்ளத் தொடங்கியது. எல்லாரும் எங்கே தொலைந்து விட்டார்கள்; ஐந்து ரூபாயையும் வாங்கிக்கொண்டு, கொஞ்சமும் நன்றியில்லாமல் எங்கே போய்விட்டார்கள்?

சற்றைக்கெல்லாம் மெல்லிய சீட்டி ஒலி ஒன்று கேட்கவே, சீனன் தன் ஆபத்தை நன்றாக உணர்ந்து கொண்டு விட்டான். தன் தைரிய மனத்தையும் ஒன்று சேர்த்துக் கொண்டு டெலிபோன் இருக்கும் சிறு அறைக்குள் பதுங்கிப் பதுங்கி நடந்தான்.

'கர்ர், கர்ர், சர்ர், சர்ர்!'

''ஹலோ! இன்ஸ்பெக்டர், சார்!''

''ஆமாம்.''

''ஆபத்து; உடனே போலீஸ் வானை எடுத்துக்கொண்டு புறப்பட்டு வாருங்கள். அவசரம்!''

''என்ன தம்பி மறுபடியும்!''

''ஆபத்து ஸார்! அவசரம் ஸார்!''

''என்ன ஆபத்து!''

''வரப்போறிங்களா, இல்லையா, ஸார்!

''சரி; இதோ வருகிறோம்!''

சீனன் டெலிபோனைக் கீழே வைத்துவிட்டுத் திரும்பியபோது புலியின் கண்கள்போல, நெருப்புப் பந்தென இரு கண்கள் அவன் அருகே விழித்தன. கைகள் இரண்டு அவன் மென்னியைப் பிடிக்க வருவதுபோல நெருங்கி வந்தன. சீனன் திகைத்துச் சிலையாகிவிட்டான். ஆனால் அந்த டெலிபோன் அறையைவிட்டு, அசைய முடியவில்லை.

அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் கீழே போலீஸ் வான் ஒன்று பாம், பாம் என்று அலறியது.

ஆனால் பாதையில் வெட்டி விழுந்து கிடந்த மரத்தைத் தாண்டி எப்படி வரமுடியும்? அதில் வந்த போலீஸ்காரர்கள் எல்லாம் வேறு வழியின்றிக் கீழே குதித்து, பங்களாவைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

(தொடரும்)



உயிரும் உரிமையும்

'சௌரி'

ராஜஸ்தானில் பூந்தி என்று ஒரு சிறு ராஜ்யம் இருந்தது. ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு அங்கே ஹாடா ஜாதி மன்னன் ஒருவன் அரசாண்டு வந்தான். அவனுடைய முன்னோர்கள் பல ஆண்டுகளாகச் சித்தூர் மகாராணாவுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வந்தார்கள். ஆனால் ஹாடா மன்னன் முடி சூடியதும், கப்பம் கட்டுவதை நிறுத்தி விட்டான்; கூடவே, பூந்தி சுதந்திர நாடாகி விட்டது. ஆதலால் யாருக்கும் பணிந்து கப்பம் கட்டப் போவதில்லை என்று பிரகடனம் செய்தான்.

இதற்கு ஏற்றாற்போல, அப்போது இருந்த சித்தூர் மகாராணா வலிமை குன்றி இருந்தான். போதிய படைபலமும் இல்லை. ஆதலால் பூந்தி அரசனுடன் போர் தொடுத்துத் தன் கௌரவத்தையும் உரிமையையும் காப்பாற்றிக் கொள்ள அவனால் முடியவில்லை.

சில வருஷங்கள் கடந்தன. புது மகாராணா சித்தூர் சிம்மாசனத்தில் முடி சூட்டப்பட்டான்; அவன் போர்த்திறமையும் புகழ் ஆசையும் மிகுந்தவன்; பிடிவாத குணம் கொண்டவன்! பலகாலம் வரை தன் ராஜ்யத்துக்கு அடிமையாக இருந்த பூந்தி

நாட்டைப் பழையபடியே அடி பணியச் செய்யவேண்டும் என்று தீர்மானித்தான். உடனே சித்தூர் ராணா, பூந்தி மன்னன் ஹாடாவுக்கு, கப்பம் கட்டவேண்டுமென ஓர் அவசர உத்தரவு அனுப்பினான்.

உத்தரவைக் கண்டதும் ஹாடா எள்ளி நகைத்தான். "திறமை இருந்தால் போர்க்களத்திற்கு வரச் சொல்!" என்று ராணாவுக்குப் பதில் அனுப்பினான்.

இயற்கையிலேயே போர் வெறி பிடித்தவர்கள் ராஜபுத்திரர்கள். அதிலும் வீரத்தால் புகழ் பெற்றவர்கள் சித்தூர் மகாராணாக்கள். ஒரு சிற்றரசனின் சவாலைக் கேட்டதும் ஆத்திரம் பொங்கி வந்தது ராணாவுக்கு. பெரும் படையுடன் பூந்தியை நோக்கிக் கிளம்பினான்.

ராணாவின் சேனை பூந்திக்கு அடுத்த நிபோரியா என்ற கிராமத்தில் தங்கி இருந்தது. ஒற்றர்கள் மூலம் இதை ஹாடா அறிந்து கொண்டான். ராணாவின் படை பலம் அவனுக்குத் தெரியும். போருக்குத் தயாராகும்படி நாடு முழுவதும் பறை அறிவித்தான். தங்கள் உரிமையைப் பறித்து, அடிமைகளாக்க முயலும் ராணாவை எதிர்க்கப் பூந்தி வீரர்கள் போருக்குப் புறப்பட்டார்கள்.

ஹாடா சிறந்த வீரன். போர்த் தந்திரங்களை நன்கு அறிந்தவன். ஐந்நூறு வீரர்களுடன் இரவிலேயே நிபோரியாவுக்குப் புறப்பட்டான். ராணாவின் படை வீரர்கள் குடித்து விட்டுப் போதையில் மயங்கிக் கிடந்தார்கள். பூந்தி வீரர்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. புலிகள் போல் பகைவர்களைத் தாக்கினார்கள். போதை தெளிவதற்குள் ஆயிரக் கணக்கான சித்தூர் வீரர்கள் மடிந்து போனார்கள். படைகள் பயந்து சிதறி ஓடத் தொடங்கின. ஒரே குழப்பம்; கூச்சம்; பரபரப்பு!

மகாராணாவுக்குத் திகில் அதிகரித்தது. பூந்தியைத் தோற்கடிப்பது இருக்கட்டும்; இப்போது தலை தப்பினால் போதும் என்று ஆகி விட்டது. மாறுவேஷத்தில் உயிர் தப்பி சித்தூர்க் கோட்டைக்கு வந்து சேர்ந்தான் ராணா. படை வீரர்களும் உயிர்ப் பிழைத்தால் போதுமென்று ஓடிவிட்டார்கள்.

பூந்தியில் வெற்றி விழா மிக விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. சித்தூரிலோ எங்கும் சோகம்தான் பரவி இருந்தது. "மிகச் சிறிய நாடு பூந்தி. அதனிடம் தோற்று சித்தூர் படைகள் புறங்காட்டி ஓடி வருவதா? அவமானம், வெட்கம், இழிவு!" மகாராணா இதை அடிக்கடி சொல்லிப் பொருமிக் கொண்டிருந்தான்.

எப்படியாவது பூந்தி மக்களின் உரிமையைப் பறித்து, அவர்களை அடிமையாக்கி விட வேண்டுமென்று ராணா உறுதி கொண்டான். 'பூந்தியைக் கைப்பற்றுதவரை தண்ணீர்கூடக் குடிக்க மாட்டேன். இது சத்தியம்!' என்று சபதம் செய்தான்.

ஆத்திரத்தில் தான் என்ன செய்கிறோம் என்பதை உணராமல், ராணா இப்படி அவசரப்பட்டு, சபதம் செய்ததைக் கண்டு படைத்தலைவர்களும், மந்திரிகளும் வருந்தினார்கள்.

'பூந்தியைக் கைப்பற்றுவதென்றால், குறைந்தது ஒரு வாரமாவது ஆகும். அதுவரை ஜலம் கூட அருந்தாமல் ராணாவால் எப்படி இருக்க முடியும்? வீணாகத் தற்கொலை செய்துகொள்ள முற்பட்டு விட்டாரே. சபதத்தை மாற்றுவதோ புறக்கணிப்பதோ அரசனுக்கு அழகல்ல. மன உறுதி படைத்த மகாராணா, செத்தாலும் தன் சபதத்தைக் கைவிடமாட்டார். இதற்கு என்ன செய்வது?....' என்று எல்லோரும் கவலைப்பட்டார்கள்.

கடைசியாக மந்திரிக்கு ஒரு யோசனை தோன்றியது. அதைப் படைத் தலைவர்களிடம் தெரிவித்தார். எல்லோரும் மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களையும் கூட அழைத்துக் கொண்டு மந்திரி மன்னனிடம் சென்றார்.

"மகாராஜா! தாங்கள் செய்திருக்கிற சபதம் மிகக் கடுமையா

னது; தயவு செய்து....'' என்றார் மந்திரி.

''கைவிட்டுவிட வேண்டும்! அதுதானே?'' என்றான் ராணு ரோஷத்துடன்.

''அப்படி அல்ல. சபதத்தைத் தாற்காலிகமாக நிறுத்த ஒரு வழி தோன்றுகிறது.''

''என்ன அது?''

''இங்கேயே பூந்திக் கோட்டை மாதிரி ஒரு சிறு செயற்கைக் கோட்டையைக் கட்டி முடித்திருக் கிறோம். சபதத்தின்படி மகாராஜா அதைக் கைப்பற்றினால், சொல் லும் பொய்யாகாது, உணவும் ஏற்றுக் கொள்ளலாம்.''

''விளையாட்டு யோசனையாக இருக்கிறதே!'' என்று ராணு சிரித்துக் கொண்டே சொன்னான்.

உடனே படைத் தலைவர்கள், ''இல்லாவிட்டால், நமக்குத்தான் நஷ்டம். பூந்திக் கோட்டையைக் கைப்பற்றக் குறைந்தது ஒரு வாரமாவது ஆகும். அதுவரை மகாராஜா சபதப்படி இருந்தால் நஷ்டம் யாருக்கு?'' என்றார்கள்.

ராணு சிறிது நேரம் யோசித் தான். பிறகு அவர்கள் தீர்மா னத்தை ஏற்றுக் கொண்டான்.

இந்தச் செய்தி சித்தூர் முழுவ தும் பரவியது. செயற்கைக் கோட்டை தயாராகி விட்டது. ஜனங்கள் அரசனின் சபதம் நிறை வேறும் வேடிக்கையைக் காண அங்கே கூடிவிட்டார்கள்.

ராணுவின் சேனைப் பகுதியில் ஹாடா ஜாதி வீரர்கள் சிலர் இருந்தார்கள். அவர்களுக்குத் தலைவன் கும்பா. புகழ் பெற்ற போர் வீரன் அவன். வேட்டைக்குச் சென்று திரும்பிய அவன் தன் தாய் நாட்டின் செயற்கைக் கோட்டையைக் கண்டான். உடனே ரோஷத்தால் அவன் கை கள் துடித்தன. தன் தாய் நாட்டிற் கும், தன் சகோதரர்களுக்கும் இழைக்கப்படும் இந்த அவமானத் தைக் கண்டு மிகவும் ஆத்திர மடைந்தான்.

ராணு சில போர்த் தலைவர் களுடன், செயற்கைக் கோட்டை யுள்ள மைதானத்திற்கு வந்தான். போர் முறைப்படி ராணுவின் வீரர் கள் அந்தச் சிறு கோட்டையைச் சுற்றி நின்று முற்றுகை இட்டார் கள். ராணு பீரங்கியால் கோட் டையைச் சுடத் தொடங்கும் போது, கோட்டைக் குள்ளிருந்து, துப்பாக்கிச் சப்தமும், குண்டுகளும் பாய்ந்து வந்தன. ராணுவும் படைத் தலைவர்களும் இந்த எதிர் பாராதத் தாக்குதலைக் கண்டு பிரமித்துப் போனார்கள்.

கோட்டை அறைக்குள்ளி லிருந்து பூந்தி வீரன் கும்பா வெளியே வந்தான். ''மகாராணு! தங்களை வரவேற்கிறேன். இந்த வீரனைப் போரில் வென்ற பிறகு அவன் சவத்தின் மேல் அடி வைத்துக் கொண்டு கோட்டை யைக் கைப்பற்ற வேண்டு கிறேன்'' என்று அவன் விஷமச் சிரிப்போடு சொன்னதும், ராணு வுக்கு அசாத்தியக் கோபம் வந்து விட்டது.

கும்பாவைக் கொல்லச் சில வீரர்கள் பாய்ந்தார்கள். உடனே மற்ற பூந்தி வீரர்களும் வாளை உருவிக் கொண்டு கிளம்பினார்கள். கடும் போர் மூண்டு விட்டது. ராணு மனமொடிந்து, தூர விலகி இருந்தே இந்தப் போரைப் பார்த் துக் கொண்டு இருந்தான். ஆயிரக் கணக்கான வீரர்களுக் கெதிரில் நூறு ஹாடா வீரர்கள் உயிரைப் பணயம் வைத்து வீரப் போர் செய்வதைக் கண்டு எல் லோரும் பிரமித்துப் போனார்கள்.

ஒரு ஹாடா வீரன் உயிரோடு இருக்கும் வரைகூட ராணு அந்தச் செயற்கைக் கோட்டைக்குள் நுழைய முடியவில்லை.

சபதத்தை நிறைவேற்ற ராணு அந்தக் கோட்டையைக் கைப்பற்றி னான். உரிமைக்காக உயிரைக் கொடுத்த பூந்தியின் வீரப் புதல் வர்களுக்கு அங்கே ஒரு சிறந்த ஞாபகச் சின்னம் எழுப்பினான். 'இனி மேல் பூந்திக் கோட்டை யைக் கைப்பற்ற முற்பட மாட் டேன்' என்று அங்கேயே சபதம் செய்தான் ராணு!

பாலர் கவி அரங்கம்

புள்ளிமான்

புள்ளிமானே புள்ளிமானே,
போவ தெங்கே, புள்ளிமானே?
புல்லைப் பறித்துத் தின்னவோ,
புனலின் நீரைக் குடிக்கவோ?

குறுகு றுத்த பார்வையால்,
குட்டி தன்னைக் காணவோ;
விறுவி றென்று செல்கின்றாய்,
வேக மேனோ கூறுவாய்?

பட்டுப் போன்ற உன்னுடல்,
பதறித் துடிப்ப தென்னவோ?
கிட்டே வந்து நின்றதும்,
எட்டிப் போவ தென்னவோ?

மிரள மிரள விழிப்பதேன்
மிரண்டு ஓட நினைப்பதேன்
அருகில் வந்தால் புல்லினை
அள்ளித் தருவேன் ஓடிவா!

—"ருத்ரா"

பரிசு பெற்ற சாமியார்

சம்பந்தன்

குறித்த வேளையில் ராஜகுருவும் அரண்மனைப் புரோகிதர்களும் அந்த ஆலமரத்தினடியில் கூடினார்கள். எங்கும் மையிருட்டு. ஒரே நிச்சப்தம். தூரத்தில் எங்கேயோ நரிகள் ஊளையிட்டன. ஆந்தைகள் அலறின. ராஜகுருவுக்குத் 'திக்திக்'கென்றது. என்ன செய்வது! அரசனுடைய ஆக்கினையல்லவா! உடனே அக்கினி வளர்த்தி மந்திரம் ஜபிக்க ஆரம்பித்தார்கள். அந்த மங்கிய ஒளியில் உறக்கமின்றி அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து நின்றார்கள். சீக்கிரத்தில் வீடு திரும்ப, அவசரமாக மந்திரம் ஜபித்தார்கள்.

கடைசியாக அனைத்தும் முடித்து, ''ஓ! தெனாலிராமனின் ஆவியே'' என்று ராஜகுரு அண்ணாந்து, பார்த்துக் கூப்பிட்டபொழுது, 'ஹா....!' என்று அம்மரத்தின் மீதிருந்து அலறும் குரல் கேட்டது. அனைவரும் மயிர்க்குச்செறிந்து அப்படியே ஸ்தம்பித்துப் போனார்கள். உடனே ''ஆ! என்னையா கூப்பிட்டீர்கள்?' என்று தொப்பென்று குதித்தான் பிரம்ம ராக்ஷஸன். கன்னங்கரேலென்று சிவந்த கண்களுடன் பார்க்கப் பயங்கரமாயிருந்தது அந்த உருவம். ''ஐயோ!'' என்றலறிக் கொண்டே, அவரவர்கள் போட்டது போட்டபடி விழுந்தடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தார்கள்.

நேரே அரண்மனைக்குச் சென்றுதான் திரும்பிப் பார்த்தார்கள் ராஜகுருவும் மற்றப் புரோகிதர்களும். பின்னால் பிரம்ம ராக்ஷஸனைக் காணவில்லை என்ற பிறகுதான் அவர்களுக்குச் சற்றுத் தைரியமேற்பட்டது. அந்நேரத்திலேயே, ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அரசனை எழுப்பி முறையிட்டார் ராஜகுரு. ''தெனாலிராமன் பிரம்ம ராக்ஷஸனைக் கூடப் பொல்லாத போக்கிரியாயிருப்பான் போலிருக்கிறதே!'' என்று அரசன் நகைத்துக் கொண்டான். ''அந்தத் தெனாலி

ராமன் பிரம்மராக்ஷஸனை யார் அடக்குகிறார்களோ அவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசளிக்கப்படும் என்று நாளைக்கே பறை சாற்றிவிடலாம்'' என்றான் அரசன். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று ராஜகுரு வீடு திரும்பினார்.

மூன்று நாட்களுக்கு அப்புறம் வயதான சந்நியாசி ஒருவர் அரசனைப் பேட்டி காண வந்தார். ''தாங்கள் எனக்கு ஒரு வரம் கொடுப்பதாக இருந்தால், அகால மரணமடைந்த அந்தத் தெனாலிராம பிரம்ம ராக்ஷஸனை அவசியம் கட்டி விடுகிறேன்'' என்று தன் நீண்ட தாடியை உருவிக்கொண்டே சொன்னார். ''என்ன வரமோ? என் அரசாங்கத்துக்கு ஒன்றும் திங்கு விளையாதே!'' என்று இடை மறித்தான் வேந்தன். ''சே! சே! அப்படியொன்றுமில்லை'' என்றார் சந்நியாசி.

''சரி, அப்படி யென்றால், அவனை அடக்குவதுடன் அந்த அந்தணனைக் கொல்லும்படி உத்தர விட்டதனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் பாபத்தையும் போக்கினால் நலமாயிருக்கும்'' என்றான் அரசன்

''ஓ! அவசியம் செய்கிறேன். அவன் கொல்லப்படாததாகவே செய்கிறேன்.''

''அப்படியென்றால் அவனை உயிர்ப்பிக்க முடியுமா, என்ன!''

''ஓ! நீங்கள் விரும்பினால் அதற்கும் ஏற்பாடு செய்கிறேன்.''

''அப்படியென்றால் ரொம்ப சந்தோஷம். பாவம்! பிழைத்துப் போகிறான். தெனாலிராமனுக்கு உயிர் கொடுத்துவிடுங்களேன்''

''உம். இவரால் அது முடியும் என்று நான் நினைக்கவில்லை. அவனை உயிரெழச் செய்வதால்தான் என்ன பிரயோஜனம்? மறுபடியும் விஷமத்தனமான வேடிக்கை செய்ய ஆரம்பித்து விடுவான்' என்று இடைமறித்தார் ராஜகுரு.

''இருக்கட்டும், இருக்கட்டும். அவனிருந்தால் சபை கலகலப்பாயிருக்கும்'' என்றான் அரசன்.

''பூஜையெல்லாம் எப்பொழுது ஆரம்பிக்கப்போகிறீர்கள்? எல்லாவற்றையும் அந்த ஆலமரத்தினடியில் தயாராக வைக்கச் சொல்லட்டுமா?''

''வேண்டாம், வேண்டாம்; இப்பொழுதே, இங்கேயே அதற்கான பூஜையைச் செய்வேன்.''

''என்ன! என்ன! ஆலமரத்திலே இருக்கிற பிரம்ம ராக்ஷஸனுக்கு இங்கே பூஜையா? சரிதான்!'' என்றார் ராஜகுரு.

''எனக்கு எல்லாம் தெரியும், ராஜகுரு. தெனாலிராமனையே உயிரோடு கொண்டு வருவதென்றால், பிறகு பிரம்ம ராக்ஷஸன் மாத்திரம் அங்கிருக்க முடியுமா!''

''ஓ, அப்படியா அது! அதோடு அவனைக் கொன்ற பாவமும் சரியாகி விடுமல்லவா!'' என்று ஆவலாய்க் கேட்டான் அரசன்.

''ஆகா! அவனே உயிரோடிருக்கும் போது, அவனைக் கொன்ற பாவம் எப்படி வரும்?'' என்று சொல்லிக் கொண்டே தன் நீண்ட தாடியையும் சந்நியாசி வேஷத்தையும் களைந்து விட்டுத் தெனாலிராமனே எதிரில் நின்றான்.

அரசனும் ராஜ குருவும் அவனைக் கண்டதும் அப்படியே கல்லாக, மண்ணாக, மரமாகச் சமைந்து போனார்கள்.

''உண்மையாகவே நீ தெனாலிராமன் தானா!'' என்று இருவரும் ஒரே சமயத்தில் கேட்டார்கள். ''ஆமாம், அதிலென்ன சந்தேகம்?'' என்று சொல்லி அதுவரை நடந்த கதையைச் சுருக்கமாக விவரித்தான்.

'பலே ஆளுடா நீ!' என்று அரசன் விழுந்து விழுந்து சிரித்தான். ஆனால் ராஜகுருவோ யோசனையில் ஆழ்ந்தார்.

உடனே மறக்காமல், தன்னையும் ஆதியில் தன்னை விடுவித்த அந்த இரண்டு சேவகர்களையும் மன்னிக்கும்படி அரசனை வேண்டிக் கொண்டான் தெனாலிராமன். முதலில் வாக்குக் கொடுத்து விட்ட பிறகு, அரசன் என் செய்வான்? அப்படியே மன்னித்ததோடு, பறை சாற்றியது போல், ஆயிரம் பொன்னையும் தூக்கி, தெனாலிராமன் கையில் கொடுத்து அனுப்பினான் அரசன்.

பொடி விஷயம்

நடலு

'பொடி' விஷயங்களை நாம், ''அது கிடக்கு, பொடி விஷயம்!'' என்று தள்ளி விடுகிறோம். ஆனால் அந்தப் 'பொடி' விஷயங்களே சில சமயங்களில் பெருவெடியாக மாறிவிடுகின்றன. அந்த வெடி 'அதிர் வெடி' யாக வெடித்த பிறகுதான், அவ்வளவு அலட்சியமாக மதித்த அந்தப் பொடியின் நெடி நமக்குத் தெரிகிறது.

நான் பள்ளியில் முதல் படிவம் படித்துக்கொண் டிருந்தேன். என் வகுப்பு உபாத்தியாயருக்கு என்னிடம் பிரியம் அதிகம். அவர் பாடம் சொல்லிக் கொடுப்பதில் கெட்டிக்காரர் என்பதுடன், எப்பொழுதுமே சுத்தமாகவும் 'டிப்டாப்'பாகவும் இருப்பார். அவர் எனது லட்சிய புருஷராகக் காட்சியளித்தார். ஆகவே நாமும் அவரையே பின்பற்றி நடக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன். ஆரம்பத்தில் சிறிய விஷயங்களில் ஆரம்பித்து படிப்படியாக முன்னேறிப் பெரிய விஷயங்களுக்குப் போக வேண்டுமே தவிர, பெரிய விஷயங்களை ஆரம்பித்துவிட்டுத் திண்டாடக்கூடாது என்பது என் கொள்கை.

அவருடைய பழக்க வழக்கங்களிலே அவர் பொடி போடும் விஷயந்தான் என்னை மிகவும் கவர்ந்தது. 'பொடி' விஷயத்திலிருந்தே தொடங்குவது எனத் தீர்மானித்தேன். அதற்குச் செலவும் அதிகமில்லை என்பது அதற்கு முக்கிய காரணம்.

அவர் பொடியை மூக்கில் 'சர்' என்று இழுக்கும் வேகம்; போட்டவுடன் அவர் முக பாவம்; உடனே அவருக்கு உண்டாகும் வீரம்; இவைகள் என்னைக் கவர்ந்தன. இரண்டு மூக்கிலும் உறிஞ்சமாட்டார். ஒரே ஒரு மூக்கில் மட்டுந்தான் போடுவார். அதன் காரணமாக, அவருடைய ஒரு மூக்கு, கொட்டைப் பாக்குபோலப் பருத்தும் மற்றொன்று வெட்டுப் பாக்குபோல சப்பையாகவும் காட்சியளிக்கும்.

காலணா செலவில் ஆரம்ப விழாவைத் தொடங்கினேன். இதெல்லாம் கெட்ட வழக்கம் என்று பலர் சொன்னதால், விழாவிற்கு நான் யாரையும் அழைக்கவில்லை. ஆயினும் எனது நெருங்கிய நண்பர்கள் இரண்டொருவர் மட்டும் கூட இருந்தனர்.

நான் ஒரு மூக்கை இடது கை விரலால் அமுக்கிக்கொண்டு, வலது கைச் சுட்டுவிரல், கட்டை விரல் இரண்டையும் சேர்த்து, கோயிலில் தக்ஷிணாமூர்த்தி விக்கிரகத்தின் கை முத்திரைபோல் வைத்துக்கொண்டு, 'சர்' என்று ஓர் இழுப்பு இழுத்தேன். ஒரு நிமிஷம் தலை சுற்றிற்று. மூக்கு ஒரே எரிச்சலாக எரிந்தது. 'அச் அச்' என்று ஐம்பது தும்மல்கள் வந்தன. அரை நிமிஷத்திற்கெல்லாம் கண்களிலிருந்து 'கர கர' வென்று கண்ணீர் கொட்டியது. நண்பர்கள் என் வீரச் செயலைப் பார்த்துப் பிரமிக்க, பெருமிதத்துடன் அவர்களை நோக்கிக்கொண்டே, சட்டைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டேன்.

நான் இதற்காகப் பயப்படவில்லை. பெரிய லட்சிய புருஷனாகப் போகும் எனக்கு இது ஒரு கஷ்டமா?

பல நாட்களுக்குப் பிறகு மூக்கு எரிச்சல் குறைந்தது. கண்களில் நீர் சொட்டுவது நின்றது. தும்மல்கள் கம்மியாயின. சட்டை ஓரங்களினாலும், வேஷ்டி ஓரங்களினாலும் துடைப்பதால், அந்த இடங்களில் ஒரு தனிக் கலர் படிவதைப் பார்த்த நான் கைக்குட்டையின் அவசியத்தை உணர்ந்துகொண்டேன். ஆனால் அது இலேசில் கிடைக்காது என்று தோன்றவே என் பாட்டியின் பழைய வெள்ளைப் புடவையிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் இரண்டு கைக்குட்டைகளைக் கிழித்து வைத்துக்கொண்டேன்.

அந்த வருஷ முடிவிற்குள்ளாகவே எனது லட்சியத்தில் ஓரளவு முன்னேறிவிட்டேன் என்பதைச் சிறிது பருத்திருந்த ஒரு பக்கத்து மூக்கே சொல்லிற்று. எனது சுறுசுறுப்பையும் வீரத்தையும் பார்த்து அநுபவித்துக்கொண்டிருந்த நண்பர்களில் சிலருக்குச் 'சபலம்' ஏற்படத் தொடங்கியது. நான் பொடி போட ஆரம்பித்த பிறகு கெட்டிக்காரனாகிவிட்டதாக அவர்கள் நினைத்தனர். வகுப்பில் முதலாவதாக இருந்ததற்கும் அதுவே காரணமென்பது அவர்கள் அபிப்பிராயம்.

தனது லட்சியத்தில் தீவிரமாக இருந்த சிலரைப் பல சோதனைகளுக்குப் பிறகு சீடர்களாக ஏற்றுக்கொண்டேன். அவர்களுக்குப் பொடிமட்டையைத் தட்டும் தத்துவத்தையும், விரல்களைச் சேர்த்து, கீழே சிதறாமல் பிடிக்கும் லாகவத்தையும், மூக்கில் இழுக்கும் சுவாரஸ்யத்தையும் உபதேசித்தேன்.

பரீட்சை முடிந்து இரண்டாம் படிவத்திற்கு வந்து சேர்ந்தேன். சிஷ்ய கோடிகளும் பெருகினர். எனது பொடிச் செலவும் அதிகரித்தது. அதற்குமுன் காலணாவுக்கு வாங்கினால் நாலு நாட்களுக்கு வந்துகொண்டிருந்தது, இப்பொழுது ஒரு நாளைக்குத்தான் சரியாக இருந்தது.

ஆகவே, வீட்டிற்குத் தெரியாமல், எனக்குண்டான புதிய செலவைச் 'சரிக்கட்ட' வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 'டிபன் பாக்ஸில் வைக்கப்படுவதால் ஏற்பட்ட காரணப் பெயரான 'டிபன்' என்ற பெயரில் நான் கொண்டுவந்து கொண்டிருந்த சாதத்திற்கு உபகரணமாக ஏதாவது வாங்கிக் கொள்வதற்கு தினம் அரையணா கிடைத்துவந்தது. மசால் வடை என்றால் எனக்கு உயிர். தினமும் இரண்டு வடைகள் வாங்கிக் கொண்டு டிபனுக்கு உட்காருவேன். எனது லட்சியத்திற்குப் பொருளாதார மந்தம் ஏற்படுவதைக் கண்டு, அதைக் கைவிட என் மனம் இடம் கொடுக்கவில்லை. அதற்காக என்னுடைய மசால் வடையில் தினம் ஒன்றைத் தியாகம் செய்தேன். இந்தத் தியாகத்தை யாரும் பாராட்டவில்லையே எனப் பதறவில்லை. பட்டங்கள் கிடைக்கவில்லையே எனக் கஷ்டமில்லை. கேவலம் ஒரு பாராட்டுக் கூட்டம் போட்டுப் பத்திரிகையில் நான்கு வரிகள் போடவில்லையே என்றுகூடக் கவலைப்படவில்லை. லட்சியம்! அதுதானே எனது குறிக்கோள்.

உபாத்தியாயர்கள் எல்லோருமே 'பொடி' மனிதர்கள்தானே என்னவோ!

இரண்டாம் படிவ உபாத்தியாயரும் பொடி போடுபவர்தாம். ஒன்றும் படிவ அதிபர் ஒரு குழலில் போட்டார். இரண்டாம் பாரத்து ஆசிரியர் இரு நாசிகளிலும் ஏராளமாக ஏற்றினர். அவரோ நாசுக்காக இழுப்பார். இவரோ ருசியான சேமியா பாயசத்தை அள்ளி உறிஞ்சுவதுபோல் "சர்..ர்..ர்" என்று இழுப்பார். கதைகளில் ராட்சதர்கள் எல்லாம் தங்கள் உயிர் நிலைகளை எங்கெங்கோ வைத்திருந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இரண்டாம் பாரத்து உபாத்தியாயர் உயிர் நிலையைப் பொடியில்தான் வைத்திருந்தார் என்று சொல்லலாம்.

ஒரு நாளைக்கு ஓரணாப் பொடி வேண்டும் அவருக்கு. பொடியை இழுத்துவிட்டுப் பாடம் ஆரம்பித்தாரானல் 'கடகட' வென்று சுறுசுறுப்பாக ஓடும். 'ஸ்டாக்' இல்லை என்றால் எல்லை மீறிக் கோபம் வந்துவிடும். ஆனல் நல்ல உபாத்தியாயர். கிளாஸில் நான்தான் கெட்டிக்காரனயிற்றே! அதனல் என்னிடம் அதிக அன்பு உண்டு அவருக்கு.

ஒரு நாள்! கிளாஸுக்கு வந்ததும் பொடி மட்டையைத்தேடினர். கிடைக்கவில்லை. வீட்டுக்கு ஒரு பையனைத் துரத்தினர்; கிடைக்கவில்லை. அவருக்கு ஒன்றுமே ஓடவில்லை. அவரது தோற்றம் பரிதாபமாக இருந்தது; எனக்கு இரக்கமாக இருந்தது; நான் ஒளித்து வைத்திருந்த எனது பொடி மட்டையைத் தியாகம் செய்யத் துணிந்தேன். ஆனல் எப்படி அதைக் கொடுப்பது?

என் மட்டையிலிருந்த 'ஸ்டாக்' அவருக்கு நான்கு தரத்திற்குக்கூட வராது. ஆயினும் அப்பொழுது அவர் கடமையைச் செய்வதற்கு உதவி, பெருமையை அடைய எண்ணினேன். துணிந்து மட்டையை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டேன். மெல்ல அவரருகில் போய் நின்றேன்.



எலி: என்னைப் பிடிப்பதற்காக அதிக நேரம் காத்திண்டிருக்காதே! சரியாக மணி பதினென்று அடிச்சதும் இந்த வீட்டு நாயை அவித்து விட்டுடுவாங்க! உனக்கு ஆபத்து!

அவர் என்னைப் பார்க்கச் சிறிது நேரம் பிடித்தது.

''ஏண்டா, பட்டு! என்ன வேண்டும்?''

''ஒன்றுமில்லை, சார், இதோ!'' என்று என் கையிலிருந்த பொடி மட்டையைக் காட்டினேன். அப்பொழுது அவர் முகத்தில் எழுந்த மகிழ்ச்சி! ஆஹா! அப்படியே 'லபக்'கென்று கையிலிருந்து பிடுங்கிக்கொண்டார்; பத்து நாட்கள் பட்டினி கிடந்தவன் பலகாரங்களைப் பார்த்ததுபோல் மட்டையைப் பிரித்து ஓர் உறிஞ்சு உறிஞ்சினார். ஒரு நிமிஷம்! சந்திரனை மேகம் மறைத்ததுபோன்ற ஒரு கலக்கம் அவர் முகத்தில். அடுத்த நிமிஷம் பூர்ண சந்திரன்போல் பிரகாசித்தது. மட்டையைச் சாவகாசமாக ஒரு தட்டுத் தட்டி மேஜையின்மேல் வைத்தார்.

''ஏண்டா, பட்டு! ஷண்முகமா, ரத்தினமா?''

''ஷண்முகம்தான், சார்.'' என்னை யறியாமலே பதில் வந்தது.

''ஏண்டா, எவ்வளவு நாளாடா இந்தப் பழக்கம்?''

''இல்லை, சார்! என் மாமா.. வாங்கி..'' விழுங்கினேன்.

''உனக்குத்தான் மாமாவே கிடையாது என்று சொல்லி யிருக்கிருயே! ஏண்டா புளுகுகிருய்?''

''இவர்....அடுத்தாத்து மாமா..'' தப்பிக்க எண்ணி உளறினேன்.

'என்னமோ சமயத்திற்கு ஒத்தாசை செய்தானே' என்று நமக்கு வந்தனம் தெரிவிப்பதற்குப் பதில் கேள்வி கேட்டுப் பிராணனை வாங்குகிருரே என்று யோசனை செய்தேன்.

''ஏண்டா நீ டவுனிலிருந்து தானே வருகிருய்?''

''ஆமாம், சார்!..''

''நாளையிலிருந்து தினம் ஒரு மட்டை வாங்கிவா. மாலையில் போகும்போது தினம் சில்லறை வாங்கிக்கொண்டு போ'' என்று கூறிவிட்டுப் பாடத்தை ஆரம்பித்தார்.

அதிலிருந்து வகுப்பில் என் மதிப்பு உயர்ந்தது. நான் உபாத்தியாயருக்கு வேண்டியவன் என்று பையன்கள் என்னைக் 'காக்கா' பிடித்தனர். எனது பொடிப் பழக்கமும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. ஒரு மூக்கிலிருந்து இரண்டு மூக்குக்கு என் பொடி போடுதல் 'பிரமோஷன்' அடைந்தது.

நான் பொடி போடுவது வீட்டில் யாருக்கும் தெரியாது. ஆனல் முதல் பாரம் படிக்கும்போது ஒரு மூக்கு மட்டும் பருத்து வந்ததைப் பார்த்த என் தாய், ''என்னடா மூக்கிலே கோளாறு. கொழுக்கட்டை மாதிரி வீங்கியிருக்கிறதே?'' என்று கேட்டுக்கொண்டிருந்தாள். நான் இரண்டு மூக்கிற்கும் உபயோகிக்க ஆரம்பித்து மற்ருெரு மூக்கும் முந்தியதற்குச் சமமாகப் பருக்க ஆரம்பித்ததும், பெருத்திருந்த மூக்கின் வீக்கம் தானுகவே குறைந்து வருவதாக நினைத்துத் திருப்தியடைந்தாள் அம்மா.

இரண்டாம் படிவ இறுதியில் என் பொடி விஷயம் விருத்தியாகி உச்ச நிலையை யடைந்தது. சதா என்னைச் சுற்றி பல 'பொடியர்'கள் வட்டமிட்டவண்ணமே இருந்தனர். அந்த வருஷம் பரீட்சை முடிந்து நான் மூன்ரும் பாரம் சென்ற பொழுது எனது சிஷ்ய கோடிகளும் என்னைத் தொடர்ந்தனர். 'சுத்த மண்டுகள்' என்று பட்டப் பெயர் பெற்ற இருவர்கூடப் பாஸ் செய்துவிட்டனர். அதற்குக் காரணம் 'பொடி'தான் என்று அவர்கள் சாதித்ததுடன் அதன் பெருமையைப் பிறருக்கும் உபதேசிக்கக் கிளம்பிவிட்டனர்.

மூன்ரும் படிவ உபாத்தியாயர் தான் அந்தப் பள்ளியின் ஹெட்மாஸ்டர். அவர் பெரிய கோபக்காரர் என்று பெயர். அவரைப் பார்த்தாலே எல்லோருக்கும் பயம். முகம் பூசனிக்காய் போலிருக்கும். அவர் சிரித்தே யாரும் பார்த்ததில்லை. ஒரு தரம் 'கிச்சு கிச்சு' மூட்டியாவது அவர் சிரித்தால் எப்படியிருக்கும் என்று பார்க்க, எனக்கு ஆசை. ஆனல் அவர் உடம்பையும் முகத்தையும் பார்த்து எனக்குச் சிரிப்பு வந்ததே

தவிர அவரைச் சிரிக்க வைக்க முடியாதென்பது நிச்சயமாகத் தோன்றியது. ஆகவே நானும் எனது பொடிச் சங்க அங்கத்தினர்களும் ஜாக்கிரதையாக இருப்பதென்று தீர்மானித்தோம்.

ஹெட்மாஸ்டருக்குக் குறிப்பாகச் சில மாணவர்களிடம் பொடி விஷயமாகச் சந்தேகமுண்டு என்பது எங்களுக்குத் தெரியும். ஆகவே 'உஷாராக'வே யிருந்தோம்.

ஒரு நாள் வகுப்பில் எல்லோரும் அளவளாவிக்கொண் டிருந்தோம். உபாத்தியாயர் வரவில்லை. அதற்குள் சிறிது சுறுசுறுப்பை உண்டாக்கிக்கொள்ளும் நோக்கத்துடன் மட்டையைத் தட்டினேன். சிஷ்ய கோடிகள் சுற்றிக்கொண்டனர். 'சர்..புர்' என்று ஆளுக்கு ஒரு 'சிமிடா' இழுத்தோம். இதை அநுபவித்துக்கொண்டிருந்த சீனுவுக்கும் ஆசை கிளம்பியது. கெஞ்சினான். எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் கையில் ஒரு சிட்டிகையை எடுத்துக்கொண்டான்.

திடீரென்று உபாத்தியாயர் உள்ளே நுழைந்தார். சட்டென்று கையிலிருந்த மட்டையை நழுவ விட்டுவிட்டு நகர்ந்தேன். அவரவர்கள் தங்கள் இடங்களுக்கு நடையைக் கட்டினர். அந்தக் குழப்பத்தில் சீனு 'சர்' என்று இழுத்தான். உபாத்தியாயர் கவனித்துவிட்டார் என்பது அவர் முகபாவத்திலிருந்தே தெரிந்தது.

"டேய், சீனு, இங்கே வா!" என்றார். அவரது கோபத்தின் எல்லை குரலிலேயே தொனித்தது. மெதுவாக முன்னேறினான் சீனு.

அவனது இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது. காரம் தாங்காமல் வாய் மூடி மூடித் திறந்துகொண்டது, ஏதோ மிளகாயைக் கடித்ததுபோல மூக்கின் அப்பாகத்திலிருந்து மேலுதடு முடிய 'பவுன் கலரில்' பொடி ஒட்டிக்கொண்டு பளபளத்தது. 'பொடி' விஷயத்திற்காக ஹெட்மாஸ்டரின் பிரம்பு சீனுமேல் விளையாடிய விளையாட்டு! அடே

படத்திலே புதிர்



மழை காலத்தில் இதை எல்லோரும் தேடிச் செல்வர்கள். ஆனால் சிலருக்கு மட்டும் எந்தக் காலத்திலும் இந்தச் சாமான் இல்லாமல் முடியாது. அது என்ன?

விடை காண வரிசைக்கிரமமாக எண்களை நேர்க் கோட்டால் ஒன்று சேர்த்துப் பார்.

அப்பா! பிரம்பை எப்படியெல்லாம் உபயோகப்படுத்தலாம் என்பதைப் பரீட்சை செய்ததுபோலிருந்தது ஹெட்மாஸ்டரின் செயல்.

அவர் தன்னால் முடிந்த மட்டும் சாம, தான, பேத, தண்டங்களைப் பிரயோகித்துப் பார்த்தார். ஒரு பையனும் வாயைத் திறக்கவில்லை. கட்டுப்பாடாக மௌனம் சாதித்துவிட்டனர். உபாத்தியாயரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. ஒவ்வொரு பையனிடமும் வந்து பைகளை எல்லாம் சோதனை போட்டார். ஒன்றும் கிடைக்கவில்லை. கீழே விழுந்த மட்டையை மட்டும் எடுத்துக்கொண்டார்.

அந்தப் 'பீரியட்' பூராவும் பொடி போடுவதால் ஏற்படும் கெடுதல்களைப் பற்றியும், அடுத்தாற்போல் யாராவது பொடி போடுவதைப் பார்த்தால் என்ன நேருமென்பதையும் விவரித்தது மிகப் பயங்கரமாக இருந்தது. 'பொடி'யின் அருமை தெரியாத 'மனிதன்!'; அவரை நம்மால் திருத்த முடியாதாகையால் இனி அவருக்குத் தெரியாமல்

மிக ஜாக்கிரதையாக இருக்கத் தீர்மானித்தேன்.

சட்டை, டிராயர், 'புஸ்தக மூட்டை' எல்லாவற்றையும் 'கஸ்டம்ஸ்' அதிகாரிபோல் சோதனை போடுவதால், அவர் கண்ணில் படாமல் கூடவே பொடி வைத்துக்கொள்ள ஒரு சரியான இடம் கண்டு பிடிக்க வேண்டும். எப்படித் தேடினாலும் அகப்படாத இடமாக இருக்க வேண்டும். அதை ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்தேன்.

அன்று இரவு பூராவும் பாடம் கூடப் படிக்காமல் பல தரம் பொடியை உறிஞ்சி யோசனை செய்தேன். உறிஞ்சல் சப்தம் கேட்டு அம்மா, ''என்னடா அது மூக்கை உறிஞ்சறே'' என்றாள்.

''ஒன்றுமில்லை .. ஜலதோஷம் அம்மா..'' என்று சமாளித்தேன்.

''நாளைக்கு மிளகுக் கஷாயம் வைத்துத் தருகிறேன்; 'கடுகுப் பொடி' பண்ணி வைக்கிறேன். போட்டுண்டு சாப்பிடு, சரியாய்ப் போயிடும்'' என்றாள்.

வேறு வழி! 'சரி' என்றேன்.

இரவு பலமான யோசனை செய்து கொண்டிருந்தபோது திடீரென்று குடுமி ரங்கனின் ஞாபகம் வந்தது. உடனே எனக்கு யோசனையும் உதயமாயிற்று. ரங்கனோ அப்பாவி! நல்ல பையன் என்று எல்லோருக்குமே தெரியும். அவனை உபயோகித்துக்கொண்டால், ஹெட்மாஸ்டர் என்ன, அவர் தாத்தா வந்தாலும் கண்டுபிடிக்க முடியாது.

நிம்மதியாகத் தூங்கினேன். வாயைத் திறக்காமல் மறுநாள் அம்மா கொடுத்த கஷாயத்தைக் குடித்துவிட்டு, 'கசக்கக் கசக்க'க் கடுகுபொடியும் சாதமும் சாப்பிட்டுவிட்டுக் குஷியாகச் சென்றேன்.

பள்ளி சென்றதும் முதல் காரியமாக ரங்கனைப் பிடித்து சரிக்கட்டி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தேன். அன்றிலிருந்து ஒருவித கவலையும் கஷ்டமுமின்றி எல்லாம் சரியாக நடந்தன.

ஒரு நாள் இலக்கணப் பாடம் நடந்துகொண்டிருந்தது. தமிழ் இலக்கணமென்றால் எல்லோருக்குமே கசப்புத்தான். அதிலும் ரங்கனுக்கு ஒரே நடுக்கம். இலக்கணப் பாடத்தில் ஹெட்மாஸ்டர் கேள்வி கேட்காத நாளும், ரங்கன் அடிபடாத நாளும் கிடையாது. அன்றும் பல கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் விழித்தான். ஹெட்மாஸ்டருக்கு அசாத்தியக் கோபம். கூப்பிட்டார் ரங்கனை. அருகே வந்து நின்றான் அவன். மறுபடியும் கேள்வியைக் கேட்டார் ஹெட்மாஸ்டர். ரங்கன் தலையைச் சொரிந்துகொண்டே விழித்தான்.

''பளார்..'' ஹெட்மாஸ்டரின் கை ரங்கனின் கன்னத்தில் பட்ட போது, காகிதப் பையை ஊதி கீழே வைத்து அடிப்பதுபோல் சத்தம் எழுந்தது.

அடுத்த விநாடி....

ரங்கனின் தலைக் குடுமி அவிழ்ந்தது. அவன் குடுமியின் உள்ளேயிருந்து பொத்தென்று விழுந்தது 'பொடி மட்டை'. கர்ஜித்தார் ஹெட்மாஸ்டர். மேலும் பலமான அடி விழுவதற்கான அறிகுறிகள் தோன்றவே காட்டிக்கொடுத்துவிட்டுத் தப்பித்துக்கொண்டான் ரங்கன்.

விசாரணையைத் தொடங்கினார் ஹெட்மாஸ்டர். ஆன மட்டும் முயன்றும் நான் ஒப்புக்கொள்ளவேயில்லை. கோபம் பொத்துக்கொண்டு வந்தது அவருக்கு. பிரம்பை எடுத்தார்.

''இனிமேல் பொடி போடாதே, போடாதே!'' என்று சொல்லிக்கொண்டே இரண்டு கைகளிலும் அரை டஜன் கொடுத்தார். பொறுமையுடன் வாங்கிக்கொண்டேன், வேறு வழி!

அன்றே உறுதியான தீர்மானம் செய்தேன்; இனி வாங்கக் கூடாதென்று.

பொடியைமட்டும் அல்ல..அடியும்தான்!

அன்று முதல் பொடியைக் கண்டாலே எனக்கு வெறுப்புத்தான்.

அநுராதா

'உதயன்'

சிலோன் எக்ஸ்பிரஸ் சென்னையை விட்டு ஏழரை மணிக்கு விறு விறுவென்று புறப்பட்டது. ரெயில் தாம்பரம் வரைக்கும் எந்த ஸ்டேஷனிலும் நிற்கவில்லை. ஏற்கெனவே மெயிலில் கூட்டம் அதிகம். அதோடு தாம்பரம் பிளாட்பாரத்தில் காத்துக் கிடந்த ஜனங்களும் முண்டியத்து மோதி ஏறிக்கொண்டார்கள். பிளாட்பாரத்தில் ஒருவர் கூடப் பாக்கியில்லாமல் எப்படியோ எல்லோரும் ஏறிக்கொண்டார்கள். மறுபடியும் வண்டி ஊதிக்கொண்டே புறப்பட்டது.

வண்டி இரவு பத்தே முக்காலுக்கு விழுப்புரம் ஸ்டேஷனில் வந்து நின்றது. இப்பொழுது வண்டியில் அவ்வளவு கூட்டம் இல்லை. அவர்கள் எல்லோரும் அடித்துப்போட்டவர்கள்

மாதிரி அமர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

திடுதிப்பென்று நடுவிலிருந்த ஒரு வண்டியில் டிக்கெட் கலெக்டர் சதாசிவம் ஏறினார். வண்டிக்குள் ஏறியதும் அவர் ஒரு முறை வண்டியைச் சுற்றித் தன் கண்ணைச் செலுத்தினார். ஒவ்வொரு ஸீட்டிலும் ஒவ்வோர் ஆசாமி தூங்கி வழிந்துகொண்டிருந்தான். இத்தனை பேர்களையும் எழுப்பி டிக்கெட் செக் பண்ணியாக வேண்டுமே! என்ன செய்வது? மிகவும் சலிப்போடு முன் ஸீட்டில் தூங்கிக்கொண்டிருந்த ஒருவனை எழுப்பப்போனார். அப்பொழுது காலில் என்னவோ மலுக்கென்று தட்டுப் பட்டது. கீழே பார்த்தார். ஒரு பையனுடைய கால்கள்! மறுபடியும் கீழே குனிந்து ஸீட்டிற்கு அடியில் பார்த்தார். ஒரு பையன் தன் நினைவில்லாமல் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் இடுப்பில் ஒரே ஒரு கிழிந்த டிராயர் மட்டும் தான் இருந்தது. அவன் தலைமயிரெல்லாம் சடை பிடித்து, சிக்குப் பிடித்துக் கிடந்தது.

சதாசிவம் அவனை இரண்டு கால்களையும் பிடித்துச் சர சரவென்று வெளியே இழுத்தார். ''ஐயோ... அம்மா!'' என்று அலறிக்கொண்டே தூக்கக் கலக்கத்தில் எழுந்து நின்றான் அந்தப் பையன்!

''டிக்கெட்டு எங்கேடா?'' என்று உறுமினார் சதாசிவம்.

''டிக்கெட்டா?....டிக்கெட்டா?'' என்று பேந்தப் பேந்த விழித்தான்.

''டிக்கெட்டுதான்!'' என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு அவன் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை கொடுத்தார்.

அறை விழுந்ததும் அந்தப் பையன், ''ஐயோ

அம்மா!..என்று அலறிக்கொண்டே ''இந்தாங்க!'' என்று தன் டிராயர் பையில் இருந்த ஒரு ரூபாய் நோட்டை எடுத்து டிக்கெட் கலெக்டரிடம் கொடுத்தான். சதாசிவம் அதை வாங்கி டபக்கென்று பையில் போட்டுக்கொண்டார். பிறகு அதை யாராவது கவனித்து விட்டார்களா என்று ஒரு தரம் சுற்றிப் பார்த்தார். யாரும் பார்க்கவில்லை. யார் பார்ப்பார்கள்? எல்லோருந்தான் தூங்கிக் கொண் டிருக்கிறார்களே!

''கழுதை, இனிமேல் டிக்கெட்டு இல்லாமல் ரெயில் ஏறினால் முட்டியைப் பேத்துப்பிடுவேன், பேத்து!'' என்று ஓர் அதட்டுப் போட்டுவிட்டு அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினார். அந்தப் பையன் தொப்பென்று பிளாட்பாரத்தில் போய் விழுந்தான்!

வண்டி புறப்பட்டது. சதாசிவம் ஒவ்வொருவராக ''டிக்கெட், டிக்கெட்....'' என்று எழுப்ப ஆரம்பித்தார். ரெயில் போகப் போக வேகமாகச் செல்ல ஆரம்பித்தது.

* * *

மறுநாள் மாலை. விழுப்புரத்தில் சிறிய கடைவீதியிலே சதுர வடிவத்திலிருந்த ஒரு வீட்டு மாடியில் உட்கார்ந்துகொண் டிருந்தார் சதாசிவம்

அதுதான் அவர் வீடு. அன்றைக்கு அவருக்கு 'விடுமுறை' தினம். ஆகையால் சாவகாசமாக ஒரு நாற்காலியில் சாய்ந்து தூங்கி விழுந்து கொண் டிருந்தார். என்ன நினைத்தாரோ? திடுதிப்பென்று விழித்துக்கொண்டு, ''அநுராதா!'' என்று கத்தினார். உடனே, ''இதோ வந்துட்டேனப்பா..'' என்று கீழே இருந்தவாறு குரல் கொடுத்தாள் அவர் பெண். பிறகு அவள் கொஞ்ச நேரத்தில் தட தடவென்று மாடிப் படிகளில் ஏறி வரும் சத்தம் கேட்டது.

"என்னப்பா?" என்று கேட்டுக் கொண்டே சதாசிவத்துக்கு அருகில் வந்து நின்றாள்.

"அம்மா, ஏதாவது டிபன் கிபன் பண்ணியிருக்காளா? பசி வயித்தைக் கிள்ளுகிறதே!" என்றார் சதாசிவம்.

"அம்மா, தோசை சுடுகிறாள்; கொண்டு வரட்டுமா?"

"கொண்டு வாம்மா, சீக்கிரம்."

அநுராதா குடு குடுவென்று கீழே இறங்கினாள். சில நிமிஷங்கள் கழித்து மேலே வந்தாள், அவள் கையில் இருந்த தட்டில் நாலைந்து தோசைகள் சாம்பாருடன் இருந்தன.

"இந்தாப்பா" என்று தட்டைச் சதாசிவத்திடம் நீட்டினாள் அவள். சதாசிவம் தட்டை வாங்கிக் கீழே வைத்து விட்டு, "இந்தா நீ எனக்குத் தோசை தந்ததற்கு நான் உனக்கு ஒரு சாமான் தருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே பக்கத்திலிருந்த பழக் கூடையிலிருந்து இரண்டு மாம்பழங்களை எடுத்துத் தன் பெண்ணின் கையில் திணித்தார் அவர்.

அவள் அந்தப் பழங்களை வாங்கித் தன் கைகளில் வைத்துக் கொண்டே, "அப்பா, நாளைக்கு எனக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறயா?" என்று குழைவாகக் கேட்டாள்.

"எதுக்கடியம்மா?" என்று கேட்டுக் கொண்டே தோசையைப் பிட்டு வாயில் தள்ள ஆரம்பித்தார் சதாசிவம்.

"நேத்துக் கடைத் தெருவிலே ஒரு பிச்சைக்காரப் பையனைப் பார்த்தேன். அவன் நேத்து பட்டணத்திலிருந்து திருச்சிக்குப் போய்க்கொண்டிருந்தானும். விழுப்புரம் வந்ததும் யாரோ ஒரு தடியன்-டிக்கெட் கலெக்டர் அவனை அடித்து, அவன் கையிலிருந்த ஒரு ரூபாயையும் பிடுங்கிக் கொண்டானும். அவன் நாசமாய்ப் போக.. அவனைப் பாம்பு பிடுங்க..சின்னப் பையன் கிட்ட இருக்கிற காசைப் பிடுங்கிக் கொள்வதற்கு அந்த எருமைக் கடாவுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ? ஏழேழு ஜன்மத்துக்கும் அவனுக்கு நரகந்தான் கிடைக்கும்! அந்தப் பாவி போகட்டும், அப்பா; விஷயத்தைக் கேளு. அந்தப் பையனோட அப்பா, அம்மாவெல்லாம் திருச்சியிலே இருக்காங்களாம். அவனுக்கு ஒரு தம்பி இருக்கானும். அவனைப் பார்க்கிறத்துக்கு ஊருக்குப் போய் ஏதாவது பழம் கிழம் வாங்கிக்கொண்டு போகலாம்னுதான் அந்த ரூபாயை வைச்சிருந்தானும். அதுக்குள்ளே அந்தக் காண்டாமிருகந்தான் பிடுங்கி கிடுச்சாம்! நீ ஒரு ரூபாயை கொடுத்தியானு, அவன் கிட்டே கொடுக்கிறேன். அவன் உடனே ரெயிலேறி அவுங்க அப்பா, அம்மாவைப் போய்ப் பார்க்கட்டும். எனக்கும் ஒரு ஏழைக்கு உதவின புண்ணியமும் கிடைக்கும்" என்று படபடவென்று பொறிந்து தள்ளினாள் அநுராதா. அவளுக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது.

இதைக் கேட்டதும் சதாசிவத்தின் முகம் குப்பென்று கூம்பி விகாரமடைந்தது. அவர் வாய் அப்படியே திறந்தபடியே இருந்தது. வாய்க்குள் தோசை வில்லை அப்படியே இருந்தது!

இரண்டு நிமிஷத்தில் சமாளித்துக் கொண்டு, "இந்தா, உடனே அவன் கிட்டே இந்த ரூபாயைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வா" என்று ஒரு ரூபாய் நோட்டை எடுத்துத்தன் மகளிடத்தில் கொடுத்தார் சதாசிவம். அவள் கையை நீட்டி அந்த ரூபாயை வாங்கிக் கொண்டு, "நீ, ரொம்ப நல்ல அப்பா ஆச்சே!" என்று அவர் கன்னத்தில் ஒரு செல்ல அடி அடித்துவிட்டுக் கடைத் தெருவிற்குக் குதித்துக் கொண்டு ஓடினாள்!

சதாசிவம் அதற்கு மேல் தோசையைத் தின்ன முடியாமல் அப்படியே தட்டில் வைத்து விட்டுச் சாய்ந்தார்.

இதோ, ஒரு புத்தகம்!

மாஸ்டர் பாலகுமார்

கண்ணைக் கவரும் சித்திரம்! கலை யுலகிலே விசித்திரம்! அழகான கதை! அருமையான நடை! இவையனைத்தும் அமைந்த ஆர்வி, ஸாமி ஆகியோரின் கதையும், சித்திரமும் நம் மனதைக் கொள்ளைகொள்கின்றன.

குற்றமற்ற குழந்தை, குமார் நயவஞ்சகனின் வலையில் வீழ்ந்து வருந்துகிறான். தன் தாயைக் காணாது வருந்துகிறான். சிறிது சிறிதாக அவன் குடும்பம் சீர்குலைகிறது. ஆம்! அந்த வஞ்சகன் அவனுடைய குடும்பத்தைச் சிறையில் அடைத்து சித்திரவதைப்படுத்துகிறான். சப்-இன்ஸ்பெக்டர் சாமுவேல் இவர்களைப் பிழைக்கவைக்க வழி செய்கிறார்.

குழந்தை குமாரின் நிலை என்ன? அவன் குடும்பம் என்னவாயிற்று? சாமுவேலின் முயற்சியின் பலன் என்ன?

இவ் வினாக்களின் விடைகளை விலை குறைந்த இந்தப் புத்தகத்தில் கண்டுகளியுங்கள். விலை நாலணாதான். வாழ்க, கண்ணனின் அரிய பண்பு!

தூங்கும் அழகி

ஜோதிபுரத்து அரசனின் அருமைப் பெண்குழந்தையை மந்திரவாதியின் மூலம் கைப்பற்றுகிறான் அவனது சகோதரன். அரசன் குழந்தையைக் காணாது கதறுகிறான். அரசனின் சகோதரனை அவனது வீரர்களே சிறைப்படுத்துகின்றனர். இளவரசியைத் தேடி ஓர் இளைஞன் செல்கிறான். மூடத்தனத்தால் அவன் கல்லாகிறான். ஜின் தேவதையின் பரம விரோதியால் ஜின்னிடமிருந்து அந்தக் குழந்தை தப்புகிறது. இதற்கிடையே மகளைக் காணாத அரசனும் அரசியும் உயிர்துறக்க முடிவு செய்கின்றனர். இவ்விதம் கதை விறுவிறுப்பாகச் செல்கிறது. கதை எழுதிய ஆர்வியையும் சித்திரம் வரைந்த ஸாமியையும் பாராட்ட வேண்டியது நம் கடமை.

—கே. ஹாரிஸ்பாபு, பாளையங்கோட்டை.

சந்திரகிரிக் கோட்டை

சந்திரகிரிக் கோட்டை! பெயரிலிருந்தே இது ஒரு சுவையான, அரசர் காலத்துக் கதையென்பது தெளிவாகிறதே! போர்க்களம் சென்ற மன்னர், மாளும் சமயத்திலே, ஒரு பாளையக்காரரிடம் பொறுப்பொன்றை ஒப்புவிக்கிறார். அரசிளங்குமரி இந்துமதிக்கு முறை கொண்டாடுபவர்களாகிய விமலன், அமலன் என்ற இரட்டைச் சகோதரர்கள் இருந்தனர். இவர்களிலே சிறந்தவனைத் தெரிந்தெடுத்து இந்துமதிக்கு மணம் செய்விக்குமாறு கட்டளையிட்டுவிட்டுச் சுவர்க்கம் செல்கிறார் மன்னர். பாளையக்காரர் பற்பல போட்டிகளை-சாதாரணமான போட்டிகள் அல்ல, பயங்கரமான வீரச் சாதனைகள் நிறைந்தவை - ஏற்படுத்திச் சகோதரர்களைச் சோதிக்கிறார். அவைகளில் இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவராக இருக்கவில்லை. ஒரு பந்தயத்தில் அமலன் ஜயித்தால், அடுத்ததில் விமலன் அவனைத் தோற்கடிக்கிறான். பாளையக்காரருக்குங்கூட, திண்டாட்டம் வந்துவிடுகிறது. அப்போது அவருடைய புதல்வி குந்தவி குறுக்கிட்டு ஒரு முடிவு காண உதவுகிறாள்! போட்டிகளின் காரணமாகச் சகோதரர்களினிடையே, பலவித அபிப்பிராயபேதங்களும் பொறாமையும், அசூயையும் ஏற்படுகின்றன. அவை அறவே நீங்கி, இருவருக்குள்ளும், உணர்ச்சி மிகுந்த தியாகப் போட்டி ஒன்றை ஏற்படுத்தி வாசகர்களை அப்படியே உணர்ச்சிவசமாக்கிவிடுகிறார், ஆசிரியர் 'ஜனா'. அருமையான முறையிலே, அழகான நடையிலே, 'ஆகா!' என அதிசயப்படும் போக்கிலே, தமிழ் மொழிக்கு ஒரு தொண்டாகவும், வாசகர்களுக்கு ஒரு விலையில்லாப் பொக்கிஷமாகவும், வெளியிடுவோருக்குப் பெருமை தரும் புத்தகமாகவும் திகழ்கிறது. உடனே கண்ணன் காரியாலயத்துக்கு எழுதுங்கள்! படித்து மகிழுங்கள்! வணக்கம்!

"மகி"

கொத்தவரங்காய்

'சுரமீன்'

அப்பாக்குட்டி தம்பி சுப்பாக்குட்டி ஆனந்தமாகக் கோலிக்குண்டு விளையாடிக்கொண்டிருந்தான். என்னதான் முயன்றாலும் இந்த 'நான்ஸென்ஸ்' புடிச்ச குண்டு குறிப்பிட்ட கோலியை நொறுக்கினாலல்லவா நன்றாக இருக்கும்? ஊஹூம்; இவன் குறி எங்கேயோ, குண்டு விழும் இடம் எதுவோ! கையில் வைத்திருந்த சிகரெட் பெட்டி அட்டைகளை இழந்துகொண்டிருந்தான் அவன்.

''எலேய்....நீ இங்கேயா விளையாடறே! வூட்டுக்கு வா, உன் தோலை உறிச்சுடறேன்'' என்ற உறுமல் கேட்டது. திரும்பினால், சுப்பாக்குட்டி அப்பா சுப்புச்சிங்க நயினா! அவ்வளவுதான், கையிலிருந்த கோலிகளை நிஜார்ப் பையில் போட்டுக்கொண்டு அவிழ்ந்த சிண்டை முடிந்துகொண்டே வீட்டை நோக்கி எடுத்தான் ஓட்டம்.

திணறிக்கொண்டே நாயனாவும் வந்துவிட்டார் அங்கே. சுப்புக்குட்டி என்ன செய்வான், பாவம்! அரிசிப் பானைக்குப் பின்னால் போய் ஒளிந்துகொண்டுவிட்டான் அவன். நாயினாவுக்கு அவன் கொத்தவரங்காய்ச் சிண்டு இருக்குமிடம் தெரிந்துவிட்டது. மெதுவாக அங்கே சென்று 'லபக்'கென்று சிண்டைப் பிடித்துவிட்டார்.

''இனிமே குண்டு ஆடாதே, ஆடாதே..'' என்று பளார் பளாரென்று அறைந்தார்; பத்து நிமிஷங்கள் அறைந்துகொண்டே இருந்தவர் திடீரென்று திடுக்கிட்டார்.

''என்னடாது, பேச்சு மூச்சைக் காணோமே! எக்கச் சக்கமாய் ஆயிடுத்தா எதுனாச்சியும்?'' என்று பயல் இருந்த இடத்தைக் கவனிக்கவே, கண்கள் இன்னும் சிவந்தன.

இத்தனை நேரம் அரிசிப் பானையையா அறைந்துகொண்டிருந்தார் அவர்?

* * *

உப்பிலியாபுரம் நயினா என்றால் உலக பிரசித்தமாயிற்றே! ஆனால், அது இந்த ஆயிரத்துத் தொள்ளாயிரத்துச் சொச்சம் வருஷத்தில் இல்லை. கிருஷ்ண தேவராயர் காலத்தில்தான்! கிருஷ்ண தேவராயர் எப்போதோ படையெடுத்து வடக்கு நோக்கிச் செல்லும் போது, அவருடைய பட்டாளத்துக் குதிரை ஒன்றுக்குக் கால் சுளுக்கிக்கொண்டுவிட்டதாம். எங்கேயும் நிவர்த்தியாகாத அந்தச் சுளுக்கு உப்பிலியாபுரத்தில் ஒரு பாட்டி விளக்கெண்ணெய் தடவி உருவிவிட சரியாயிற்றாம். சந்தோஷப்பட்ட ராஜா பல வெகுமானங்களை அந்தப் பாட்டிக்குக் கொடுத்து, பாட்டியின் பேரனைத் தன் பிரதிநிதியாக அவ்வூரில் நியமித்துச் சென்றார் என பழைய செப்பேடுகள் கூறுகின்றன!

அப்பேர்ப்பட்ட பேரனின் நேர் சந்ததியார்தான் நம் நயினா. ஆனால், என்ன செய்வது? எல்லாம் பழம் பெருமையாகிவிட்டதே!

தற்போது மாங்காய்ப் பிள்ளையார் கோவிலும் (கோவில் காம்பவுண்டிலுள்ள செங்கற்கள் மாங்காய் அடிக்கப் பிரயோஜனப் பட்டதால் சுப்பாக்குட்டி அந்த ஸ்தலத்திற்கு வைத்த பெயர்!) இரண்டொரு மோஹன்சோதாரோ வீடு

களும், ''வருவீர், வருவீர், வந்து எங்கள் வயிற்றெரிச்சலைப் பச்சை ஜலம் ஊற்றித் தணிப்பீர்'' என்று மேகத்தைப் பார்த்துக் கெஞ்சும் வயல்களும் உடையதுதான் அந்த ஊர்.

இப்போதுகூட என்ன? ராஜா அந்தக் காலத்தில் அளித்த பட்டுப் பீதாம்பரத்தையும், ஜரிகைத் தலைப்பாகையையும் தரித்துக் கொண்டு, பட்டாக்கத்தியையும் அணிந்துகொண்டு புறப்பட்டாரானால் ஊர் முழுவதும் அவரையே ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும்! (பயபக்தியுடன் அல்ல, கிண்டலுடன்தான்!)

ஆனால், அவருடைய உண்மை நிலை, எஸ்.எஸ்.எல்.சியை ஒன்பது தடவை படையெடுத்துப் பின் வெற்றி கொண்ட அப்பாக்குட்டிக்குக் கிடைக்கும் வேலையில்தான் நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் யார் கேட்டாலும் மதிப்பாக, ''நெலம் நீச்சை விட்டுவிட்டு எம் மவனை வேலைக் கனுப்ப இஷ்டமில்லை'' என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவருடைய தற்போதைய கோபத்துக்குக் காரணம், கூடிய விரைவில் வரப் போகும் பெரிய செலவுகளை எப்படிச் சமாளிப்பதென்பதுதான்.

* * *

''நாயினாவ்....'' என்ற குரல் அவர் காதில் விழுந்து வைத்தது. கிருஷ்ண தேவராயர் காலத்திலிருந்து நவபாரத இந்தியாவிற்கு வந்து குதித்தார் நாயினா. ''வந்து ..நான் ஷெல்ப்பிலே பத்து ரூவா பணம் கைமாத்தா வாங்கி வச்சிருந்தேனே. செலவு செஞ்சுட்டீங்களா?'' என்ற கேள்வி அவர் சிந்தனையை ஒரு கிளறு கிளறிற்று.

''இ இஇ..இ இல்லே, தம்பீ, மூக்குப்பொடி மட்டை வாங்கிட்டு மீதியை அஅ அங்கயே வ...வச்சிட்டேனே!'' அவர் குரல் நடுங்கியது. நடுக்கம் ஏன்? பிள்ளையிடம் கூடவா பயம்? உண்மை நிலைமை அதுவல்ல. அடுத்த ஊர்த் திருவிழாவுக்குப் போனபோது அவர் கோவிந்தா அண்டு கோவிந்தா கம்பெனிப் பக்கம் தற்செயலாகப் போயிருந்தார். வாசலில் தொங்கியிருந்த விளம்பரம் அவருடைய உள்ளத்தைச் சுண்டி இழுத்தது.

''பொது மக்களே! ஏன் உங்கள் வாசலில் நிற்கும் அதிருஷ்ட தேவதையை வேண்டாம் என்கிறீர்கள்? ஐந்து ரூபாய்க்கு ஐயாயிரம் ரூபாய் அள்ளிக் கொடுக்கும் அசடுகள் எங்கேயாவது உண்டா? அந்த அசடுகள்தான் நாங்கள். எங்கள் குறுக்கெழுத்துப் போட்டிக் கூபனைப் பூர்த்தி செய்து, ஐந்து ரூபாய் பிரவேசக் கட்டணம் செலுத்திவிட்டால் நிச்சயம் உங்களுக்குத்தான் அதிருஷ்டம். செய்யுங்கள் இன்றே. போனால் வராது. பம்பாய்ப் போட்டி!''

முதல் காரியமாக ஜேபியிலிருந்து பத்து ரூபாய் நோட்டை வெளியே எடுத்தார். அந்தப் பத்து ரூபாய் நேராக கோவிந்தா அண்டு கோவிந்தா கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்தது. இதை எப்படி அவர் தன் பிள்ளையிடம் கூற முடியும்?

''என்ன நாயினா! நீங்க கிராஸ் வேர்ட்ஸ்லே போட்டுட்டீங்கன்னு சுப்பு சொல்றானே. நான் வேலைக்கு அப்ளிகேஷன் போடணும்னு வெச்சிருந்தேன், இப்ப என்ன நயினா பண்றது?'' என்று கவலையில் ஆழ்ந்துவிட்டான் அப்பாக்குட்டி.

''அடப்பாவி, முளைச்சு மூணு அங்குலம்கூட வளரல்லே, அதற்குள்ளே சி.ஐ.டி வேலையா! வரட்டும் அந்தச் சுப்பு!'' என்று மனத்திற்குள் கருவிக்கொண்டே நாயினா, ''ஆமாண்டா குட்டி, பிரைஸ் வந்துதுன்னா சுளையா ஐயாயிரம் ஆச்சேடா! பத்து ரூபாய்க்கு எத்தனை பெரிசு பாரேன்'' என்று மகனுக்குப் பதிலளித்தார்.

''பிரைஸே வல்லேன்னா, உள்ள பணத்துக்கும் வழி என்னப்பா?'' என்று கேட்ட மகனுக்கு, ''நீ வேறே வாய் வச்சுறாதே தம்பீ; சோசியன், குடுகுடுப்பாண்டி எல்லாம் நல்ல வாக்கு சொல்லியிருக்குறாங்க. கம்பெனி மோட்டுவளையிலிருந்த பல்லிகூட ஐயம்னு சொல்லிச்சு'' என்றார் நாயினா.

அப்பாக்குட்டியின் கவனமோ வேறு எங்கேயோ இருந்தது. அவ

னது கையில் ஒரு பத்திரிகை. அதில் ஒரு விளம்பரம்.

''வேலையில்லாமல் தவிக்கிறீர்களா? கவலை வேண்டாம். எங்கள் கம்பெனியில் வேலை தருகிறோம். சம்பளம் நாநூறு முதல் நாலாயிர ரூபாய்வரை. இன்றே மனுச் செய்யுங்கள். வேலைக்கு உத்தரவாதம்—

யூனிவெர்ஸல் டிரேடிங் கம்பெனி; தபால் பெட்டி நெ. லக்ஷம், பம்பாய்.''

கிருஷ்ணதேவராயரை மனத்திற்குள் தியானித்துக்கொண்டே வெளியே சென்றான் அப்பாக்குட்டி. நேரே தன் நண்பனிடம் சென்று ஐந்து ரூபாய் கடன் வாங்கி மனுவொன்றையும் போட்டு வைத்தான் அவன்.

* * *

அப்பாக்குட்டி அன்று மாலை வரை வீட்டிற்குள் எட்டிப் பார்க்கவே இல்லை. தான் அண்ணாவிடம் ரிபோர்ட்டு சொன்னது, குண்டு விளையாடியது போன்றவைகளுக்காக 'உப்பிலியாபுரம் பீனல் சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டு உடனடியாக தண்டனையும் நிறைவேற்றப்படும்' என்பதையும் அவன் நன்கு அறிவான். எப்படியோ, அம்மா சிபாரிசின் பேரில் தண்டனைகள் தளர்த்தப்பட்டதால் கடைசியில் வீட்டிற்குள் வந்தான் என்று வைத்துக்கொள்ளுங்களேன்.

—நாட்கள் இறக்கையைக் கட்டிக்கொண்டு பறக்க முயற்சி செய்துகொண்டிருந்தன. ஆச்சு.. இதோ

இதோ என்று தீபாவளிப் பண்டிகையும் வந்துவிட்டது. அடுத்த வாரம் தீபாவளி.

என்றுமில்லாத திருநாளாகத் தபால்காரன் அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றான். ''ஐயா, அஞ்சல்'' என்ற சப்தம் கேட்டு வெளியே வந்தார் நாயினா. வந்தது ஒட்டப்பட்டிருந்த உறை.

அப்பாக்குட்டியின் பெயருக்குதான் வந்திருந்தது. ஒரே கணம்தான். விஷயங்களை ஊகித்தார் நாயினு. ''அப்பாக்குட்டீ! இங்கே வாடாலெ; நல்ல சேதி வந்திருக்குடா. உனக்கு வேலை கிடைச்சிருக்குடா'' என்று ஒரேயடியாகக் கூப்பாடு போட்டார், எட்டு ஊருக்குக் காது கேட்கும்படியாக. எட்டாவது ஊரில் ஊர் சுற்றிக்கொண்டிருந்த அப்பாக்குட்டியும் ஒரே ஓட்டமாக ஓடிவந்தான், 'இதோ, வந்துட்டேம்ப்பா' என்ற குரலுடன்.

வந்திருந்த கடிதம் பம்பாயிலிருந்துதான். அவன் தகுதிக்கேற்ப நல்ல வேலையில் நியமித்திருப்பதாகவும், உடனே கையில் இருநூறு ரூபாய்ப் பணத்துடன் மானேஜரைப் பேட்டி காணும்படியும், அவ்வாறு செய்யத் தவறினுல் வேலை அவனுக்காகக் காத்திருக்காதென்றும் கண்டிருந்தது.

''குட்டீ! நான் போய் ஏதாவது பணம் புரட்டிக்கிட்டு வர்றேன். நீ நாளைக்குக் காலையிலேயே புறப்பட்டுடு. நல்ல நாளாவும் இருக்குது'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார் நாயினு. பீதாம்பரம், தலைப்பாகை, பட்டாக்கத்தி இவைகளை அணியக்கூட நேரமில்லை அவருக்கிருந்த அவசரத்தில்.

அப்பாக்குட்டி, ''லல்லல்லா'' பாடிக்கொண்டிருந்தான். கொல்லையில் கட்டியிருந்த ஆட்டுக்குட்டி தன் எஜமானனுக்கு வேலை கிடைத்ததில் தனக்கேற்பட்ட சந்தோஷத்தை ''மே மே'' என்று கத்தித் தெரிவித்துக்கொண்டது.

சுப்பாக்குட்டி தன் சிண்டைத் தட்டியவாறே வந்தான். ''அண்ணு! பம்பாயிலிருந்து லீவுக்குத் திரும்பறப்போ, என்ன வாங்கி வருவீங்க?'' என்று கேட்டான்.

''கோவிக்குண்டு!'' என்று அப்பாக்குட்டி பதிலளித்ததும், 'அச்சா!' என்று எம்பிக் குதித்த சுப்பாக்குட்டி வாசலில் போய் விழுந்தான் விளையாடுமிடத்தினருகே.

பணமும் அதிருஷ்டவசமாகக் கிடைத்துவிட்டது. அதை மகனிடம் கொடுத்துவிட்டு, ''இந்தா, புள்ளே! பம்பாய் பொல்லாத ஊராம். ஜாக்கிரதையாக இருந்துக்க. அப்பப்ப கடிதாசு போடு. உன் உடம்பைப் பார்த்துக்க. நம்ப செட்டியார் கடை எண்ணெய் ஒசத்தி. பார்ஸலில் அனுப்புகிறேன். சப்பாத்திக் கடற்கரையாமே (சௌபாத்திதான். வேறென்றுமில்லை!) அதில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் பண்ணு. தீபாவளிக்கு இல்லாமெ ஊருக்குப் போகிருய் என்றுதான் வருத்தமாயிருக்கு'' என்று பல்வேறு விதங்களில் அப்பாக்குட்டிக்கு விடை கொடுத்தனுப்பினுர் அவர்.

கிடைத்த வேலையை உதறியெறிந்துவிட்டு வரப் போகிருன் அவன் என்று அவருக்கு எப்படித் தெரியும்?

கண்களில் நீர் மல்க பிரியா விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான். ''கூடிய சீக்கிரம் லீவு எடுத்துக்கொண்டு உங்களைப் பார்க்க வருகிறேன், நாயினு!'' என்று கூறினுன். ரெயிலும் புறப்பட்டது.

அதே ரெயிலில் அன்றைத் தபால் கட்டு வந்திறங்கியது உப்பிலியாபுரம் ஸ்டேஷனில். அதற்குள் என்ன விசேஷம் இருக்கிறதோ?

* * *

ரெயிலில் திருவாரூரை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்த நாயினு, திடீரென்று கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்து பூவுலகத்திற்கு வந்தார். ''போலீஸ், போலீஸ்'' என்று கூக்குரலிட ஆரம்பித்தார். அவர் போட்ட கூச்சலில் கம்பார்ட்மெண்டே அலற ஆரம்பித்தது. ''என்ன என்ன'' என்று யாவரும் ஓடிவந்தனர். ஒரு அப்பாவி அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்தான்.

வண்டி நின்றது. கார்டு, போலீஸ் யாவரும் அவரை நோக்கிப் படையெடுத்தனர். ''பாவி, கெடுத்தானையா! நல்ல ஜிப்பாப் போட்டுக்கினு இருந்தானையா! பாவி, ஏமாந்துட்டேனே!'' என்று பிரலாபம் பாட ஆரம்பித்தார்.

ஒரு வழியாக விஷயத்தை யாவரும் அறிந்துகொண்டனர். தபால் கட்டு வந்து இறங்கியது என்று சொன்னேனல்லவா? அதில் நாயினுவுக்கு ஒரு மணியார்டரும் வந்

ஒரு பங்கு நாயினுவுக்கு வந்தது. குடுகுடுப்பாண்டி, பல்லி, ஜோசியன் இவர்கள் சொன்னது எல்லாம் உண்மையாகவே மாறிவிட்டன. இந்தப் பாவி மனிசர் தான் வாங்கிய கடனைக் கொடுத்து விட்டு, தீபாவளிக்குச் சாமான் வாங்கி வரலாம் என்று திருவாரூருக்குப் புறப்பட்டிருக்கிறார். அவர்

திருந்தது. அது பண்ணின கலாட்டாத்தான் இவ்வளவும்.

ஆமாம். கோவிந்தா அண்டு கோவிந்தா கம்பெனி போட்டியில் நாயினுவுக்கு நிஜமாகவே ஒரு பரிசு கிடைத்திருந்தது. முதற் பரிசை எட்டால் வகுத்து அதில் குரலிடையே அடிபட்ட மேற்படி ஜிப்பாப் பேர்வழி அவர் அருகில் பிரயாணம் செய்திருக்கிறுன். நைஸாக விஷயத்தைப் புரிந்து கொண்டு பணத்துடன் நடுவழியில் இறங்கிவிட்டிருக்கிறுன். இது தான் சமாசாரம்.

அன்று மாலை சென்னைத் தினசரிகளில் ''கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை'' என்ற தலைப்பில் இதைப் பிரசுரம் செய்து வழக்கம் போல், ''போலீஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்'' என்று முடித்திருந்தது.

இத்தனை நாள் பல கஷ்டங்கள் பட்ட பிறகு பிள்ளைக்கு வேலை கிடைத்த செய்தி ஒன்று, தான் பரிசு பெற்ற சமாசாரம் இரண்டினுலும், தீபாவளியை விமரிசையாகக் கொண்டாட எண்ணியிருந்தார் நாயினு. பாவம்! கடைசியில் இப்படியா ஆகவேண்டும்? தீபாவளியே இந்த வருஷம் கொண்டாடுவதில்லை என்று முடிவு செய்துவிட்டார் நாயினு.

மறுநாள் இரவு வாசலில் உட்கார்ந்துகொண்டு கவி நந்தி திம்மண்ணுவின் பாட்டு ஒன்றைப் பாடிக்கொண் டிருந்தார் நாயினு. அப்போது வண்டி ஒன்று நின்ற சப்தம் கேட்டது. ''நம் வீட்டுக்கு யார் வருகிறுர்கள்? என்று எட்டிப் பார்த்த நாயினு திகைத்துப் போய்விட்டார். இறங்கியது அப்பாக்குட்டி! அவரது மூளையின் கற்பனு சக்தி ஓடியது, ஒரே ஓட்டமாக. பிள்ளை பம்பாய் சென்று நான்கு நாட்கள்தானே ஆகின்றன. அதற்குள் எப்படித் திரும்ப முடியும்? இதில் ஏதோ சூது இருக்கிறது. நம் பிள்ளை பம்பாய் செல்லவில்லை என்று ஊகித்த அவர் பிரலாபம் நெம்பர் இரண்டை ஆரம்பித்தார். 'அடப்பாவி, உன்னை நம்பி இருநூறு ரூபாய்க் கொடுத்தேனே! பம்பாய்க்கும் செல்லாமல் எங்கும் செல்லாமல் ஊர் சுற்றிவிட்டு வருகிறுயே'' என்று கத்த ஆரம்பித்தார்.

பழையபடி சில கணங்களில் ஊர் கூடியது.

அப்பாக்குட்டி கல்லுப்பிள்ளையார் போல அசையாதிருந்தான். இச்சமயம் பார்த்துத்தான் ஒரு மோட்டார் சைக்கிள் வாசலில் வந்து நின்றது. ''அப்பாக்குட்டி வந்திருக்கிறுனு?'' என்று இடி இடிக்கும் குரலுடன் கீழே இறங்கினுர் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர்!

* * *

நாயினு அநேகமாக மூர்ச்சை போட்டு விழும் கட்டத்திற்கு வந்துவிட்டார். இன்ஸ்பெக்டரே நாயனுவின் மூர்ச்சையைத் தெளிவித்து விவரம் கூறத் தொடங்கினுர். ''போலீஸ்காரர் என்ருல் அர்த்தமில்லாமல் ஜனங்கள் பீதிப் படுவதால்தான் குற்றங்கள் நாட்டில் அதிகமாகின்றன'' என்று விசித்திர வியாக்கியானமொன்றுடன் ஆரம்பித்தார். ''இப்போதுதான் பாருங்களேன். அர்த்தமில்லாமல் அழுகிறீர்கள். மூர்ச்சை போடுகிறீர்கள். நாளையோ தீபாவளி. நன்ருக இருக்கிறது உங்கள் செய்கை! உங்கள் பிள்ளைக்கு உண்மையில் பம்பாயில் வேலை இல்லை. சென்னையில்தான். அதுவும் அரசாங்கத்தில் - ரகசிய போலீஸ் டிபார்ட்மெண்டில்தான். தனக்கு வேலை கிடைத்த விஷயத்தை உங்களிடம் சொல்லாமல் எவ்வளவு நாள்தான் இருக்க முடிகிறது என்பதை அறிய விரும்பினுன் உங்கள் கெட்டிக்காரப்பிள்ளை. ஆகவேதான் இந்த இல்லாத ஆர்ப்பாட்டமெல்லாம். நாட்டில் பல அட்டூழியங்கள் நடந்து வருகின்றன. பம்பாயில் கலாட்டாக்கள் அதிகமாகிவிடவே நம் ஸி.ஐ.டி.களின் உதவியை நாடினர் அந்த மாகாணப் போலீஸார். ஆகவே இங்கிருந்து அப்பாக்குட்டி அனுப்பப்பட்டான். போகிற போக்கில் சும்மா போகப்படாதா? 'வேலை தேடித் தருகிறேன்' என்று தபால் பெட்டி நம்பரை மட்டும் போட்டுக்கொண்டு தலைமறைவாகத் திரியும் சில கம்பெனிகளைப் பொறியில் மாட்டிவைக்க எண்ணினுன். ஒரு கம்பெனியிலிருந்து இவனுக்கு ஆர்டர் வந்ததும், உடனே புறப்பட்டுவிட்டான் அவன். அந்தக் கம்பெனியில் மானேஜருடன் பேசிக்கொண் டிருந்திருக்கிறுன். மறைவான இடத்தில் டேப் ரெகார்டரும், போட்டோக் கருவியும் போலீசாரால் வைக்கப் பட்டிருந்தன. மானேஜர் வேஷக்காரன் இனிக்கப் பேசி பணம் கேட்டான். அப்பாக்குட்டியும் குறி

செய்யப்பட்ட நோட்டுக்களைக் கொடுத்தான். மானேஜர் இத்தோடு நின்றிருந்தால் பரவாயில்லையே. ஆனால், அவனுக்கு அப்போதுதான் வந்திருந்த ஒரு பார்சலைப் பிரித்திருக்கிறான். அந்தப் பார்சல் ஒரு சிறிய பெட்டி. அதற்குள் ஒரு பழைய பர்ஸ். அந்தப் பர்ஸைப் பிரித்துப் பார்த்த மானேஜர் உள்ளே ஐம்பது பத்து ரூபாய் நோட்டுக்களைக் கண்டு மகிழ்வுடன் அதைப் புரட்டியிருக்கிறான். நடுவிலிருந்து ஒரு கொத்தவரங்காய் விழுந்தது. கேட்க வேண்டுமா? அப்பாக்குட்டி விசில் ஊத, போலீஸார் மானேஜரை அரெஸ்ட் செய்ய, இதுதான் ஐயா உங்க மகன் பிராபல்யம்!'' என்று கூறி முடித்த இன்ஸ்பெக்டர் அப்பாக்குட்டியின் கையைக் குலுக்கிச் சுளுக்கு ஒன்றை ஏற்படுத்தினார். சுப்பாக்குட்டி விளக்கெண்ணெய் எடுத்துவர உள்ளே ஓடினான்.

''ஆம். ஜிப்பாப் பேர்வழியும், பம்பாய் மானேஜரும் ஒரே கும்பல்தான். தன் கையில் பணமும் பர்ஸும் இருந்தால் போலீஸாருக்குத் துப்புக் கிடைத்து விடுமோ என்று அஞ்சிய அந்தக் கெட்டிக்காரத் திருடன் பார்சலில் பம்பாய்க்கு நேரே அதை அனுப்பியிருக்கிறான். அப்பாக்குட்டி பம்பாய் போனாலும் விடாத பேர்வழியாயிற்றே! தந்தை களவு கொடுத்ததைத் தனயன் கண்டு பிடிக்க உதவியவை அந்தப் பழைய மணிபர்ஸும், சுப்பாக்குட்டியின் பின்னலை நினைவுபடுத்திய கொத்தவரங்காயும்தான்.

நாலு நாளைக்குள் பம்பாய் சென்று எப்படித் திரும்ப முடியும் என்று கேட்கிறீர்களா? இவ்வளவு பெரிய ஸி.ஐ.டி.க்கு விமானப் பிரயாண வசதிகூட அரசாங்கத்தார் அளிக்கமாட்டார்களா என்பதை நீங்களல்லவா ஊகிக்க வேண்டும்!

விளக்கெண்ணெயுடன் திரும்பிய சுப்பாக்குட்டியின் கையில் ஒரு அட்டைப் பெட்டியை நீட்டினார் போலீஸ் இன்ஸ்பெக்டர். அதனுள் கொத்தவரங்காய் வெடிகளும் கிருஷ்ணதேவராயர் கம்பெனியில் செய்த அழகிய கண்ணாடிக்கோலிக் குண்டுகளும் இருந்தன.

எண்ணிலே படங்கள்

1 முதல் 9 வரையில் 'மூட்டை'

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

நவம்பர் முதல் புதிய பாரதம்

ஜனத்தொகை

சென்னை		3-கோடி	—
ஆந்திரப் பிரதேசம்		3-கோடி	22-லட்சம்
அஸ்ஸாம்		—	90 ,,
பீஹார்	(சுமார்)	3-கோடி	90 ,,
பம்பாய்		4 ,,	78 ,,
ஜம்மு - காஷ்மீர்		—	44 ,,
கேரளா		1-கோடி	36 ,,
மத்தியப் பிரதேசம்		2 ,,	61 ,,
மைசூர்		1 ,,	91 ,,
ஒரிஸ்ஸா		1 ,,	46 ,,
பஞ்சாப்		1 ,,	60 ,,
ராஜஸ்தான்		1 ,,	60 ,,
உத்தரப் பிரதேசம்		6 ,,	32 ,,
மேற்கு வங்காளம்	(சுமார்)	2 ,,	62 ,,

மத்திய சர்க்கார் நிர்வாகத்திலுள்ள ஆறு பிரதேசங்கள்:

(1) அந்தமான் - நிகோபார் தீவுகள் (2) டில்லி, (3) ஹிமாசலப் பிரதேசம், (4) லக்ஷத் தீவுகள் (5) மணிப்பூர் (6) திரிபுரா.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No. M. 5542

கண்ணன் தீபாவளி மலர்

அத்தனை வாண வேடிக்கைகளையும் மலரிலே கண்டு மகிழலாம்

- ★ பிரபலமான ஆசிரியர்களின் கதைகள், கவிதைகள்
- ★ மூவர்ணச் சித்திரங்கள்; வெட்டி ஒட்டும் படங்கள்
- ★ முழுநீளக் கதைகள்; சித்திரக் கதைகள்
- ★ ஹாஸ்யத் துணுக்குகள் முதலியன

எல்லாம் நிறைந்த மலர் கண்ணன் மலர்

விலை 1 ரூபாய்தான்

இன்றே உங்கள் பிரதிக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்



கண்ணன் ✠ மயிலாப்பூர் ✠ சென்னை-4